Registered as a News Paper | பக்கங்கள் 06 | விலை: ரூபா 5-00

YMCA

# ஈழநாதம்

THE EELANAATHAM | Pepoles Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 06 | [19-04-93] | திங்கட்கிழமை | ஓசை 60

## பட்டதாரிப் பயிலுனர் நியமனநேர்முகப்பரீட்சை

பட்டதாரிப் பயிலுனர் பரீட்சைக்குத் தோற்றி புள்ளிகள் பெற்றும், கொட்டகலையில் நடைபெற்ற சேவைமுன் பயிற்சிக்குச் செல்ல முடியாதவர்களுக்கும், பட்டதாரிப் பயிலுனர் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்களுக்கும், ஒரே தினமான (21-04-93) புதன்கிழமையும், இதே போன்று மேற்படி பரீட்சைக்குத் தோற்றி அப் பரீட்சைமுடிவுகளைப் பெறாதவர்களுக்கு 22-04-1993 வியாழக்கிழமையும் யாழ். கல்வித்திணைக்க [6-ம் பக்கம் பார்க்க]

# இன்று அன்னை பூபதி நினைவாக குடாநாடெங்கும் எழுச்சிக் கோலம்



அன்னை பூபதியின் நினைவாக நேற்று நீகன் நகரிலிருந்து மக்கள் உண்ணாவிரதம் நடைபெற்ற யாழ். இந்துக் கல்லூரி மைதானம் நோக்கி ஊர்வலமாக சென்றபோது பிடிக்கப்பட்ட படம்.

## உண்ணாவிரதம், நினைவஞ்சலி கூட்டங்கள் கோட்ட ரீதியாக நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைக்காகத் தன்னுயிர் ஈந்த தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு இறுதிநாள் இன்று யாழ் குடாநாடெங்கும் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது, உண்ணாவிரதங்கள், அஞ்சலிக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பன கோட்டரீதியாக இடம்பெறவுள்ளன அதேவேளை, இந்நினைவுநாளை முன்னிட்டு குடாநாட்டின் பல பகுதிகளில் அலங்காரப் பந்தல்களும், வீதி அலங்காரங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஒருமாத காலமாக தியாகி அன்னை பூபதிக்கு தமிழீழமெங்கும் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. தியாகி அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தமிழீழமெங்கும் கடந்த ஒரு மாத காலமாக எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகள், பொது இடங்கள் எங்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் அன்னைக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலானதும், எழுச்சியூட்டுவதுமான பல கோசங்களைத் தாங்கிய பதாகைகள் வீதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்தன. இவற்றைவிட யாழ் நகரப்பகுதியில் உள்ள பல பிரதான சந்திகளில் அலங்கரிக்கப்பட்ட வீதி வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் அரச, தனியார் துறை அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள், கல்விக்கூடங்கள், வர்த்தக நிலையங்கள், பொதுமக்களின் வீடுகள், சன சமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்றவற்றில் அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு அதில் தியாகி அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டிருக்கின்றன அருகில் அணையாத தீபம் ஏற்றப்பட்டிருந்தது. இப்படத்துக்கு மலர்மாலைகள் அணிவித்தும், மலர்கள் தூவியும் மக்கள் பலர் தமது அஞ்சலிகளைச் செலுத்திச்சென்றனர். இவற்றைவிட கடந்த நான்கு நாட்களாக அன்னை பூபதியின் நினைவாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் வட்டப் பிரிவு ரீதியாக அடையாள உண்ணா விரத நிகழ்வுகளும், சிரமதானப் பணிகளும் நடைபெற்றுவருகின்றன இவ

(6ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு இன்றைய நிகழ்வுகள்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நினைவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளன.

இன்றைய இறுதி நாள் நிகழ்வாக உண்ணாவிரத நிகழ்வுகளும், நினைவுரைகள், சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

வலிகாமம் மற்றும் தீவகக் கோட்ட அன்னை பூபதியின் ... டன் 'தியாக சுடர்' எனும் வில்லிசை நிகழ்வுகள் 'தியாக தீபம்' நாட்டிய நாடகம் 'அன்னையிட்ட தீ' கவியரங்கு மற்றும் யாழ். பல்கலைக்கழக கலைஞர்களின் 'விடியலைத் தேடும்பறவைகள்' இசைநிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

வடமராட்சி கோட்ட மட்டத்திலான இறுதிநாள் நிகழ்வுகள் இன்று மாலிச்சந்தி பிள்ளையார் கோவிலில் நடை...

# தியாகிபூபதியின் அறப்போர் ஒருதேசியஇனத்தின்எழுச்சி

## சீதனப் பிரச்சினை பற்றி பகிரங்க விவாதம்

சீதன முறை இன்று ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்சினை எமது சமூகத்தின் ஒவ்வொரு குடும்பத்தையும் ஊடுருவி நிற்கிறது. சீதன முறையால் பெண்களே நேரடியான பாதிப்பிற்கு இலக்காகியுள்ளனர். பெண்களின் வாழ்க்கையை தீர்மானிக்கும் அளவிற்கு இப் பிரச்சினை பூதாகரவடிவத்தை எடுத்துள்ளது.

அன்றொருகாலம், திருமணத்தின்போதுபெண்ணுக்கு பெற்றோர்தாய்வழிச்சொத்தாகமன முவந்து அளிக்கும் உடமைகள் சீதனமென வழங்கப்பட்டது. ஆனால் இன்று மணமகளுக்கு மட்டுமன்றி, மண மகனிற்கும் அவனின்குடும்பத்தாருக்கும் பல்வேறு வடிவில் சொத்துக்களைப் பரிமாறும் முறையாக சீதனம் மிகவும் சிக்கலான விவகாரமாக உருவெடுத்துள்ளது. அத்துடன் சீதனம் இருந்தால் மட்டுமே திருமணம் என்ற நிர்ப்பந்த நிலையும் எழுந்துள்ளது. இந்த நிலைமை காரணமாக இன்று எண்ணில்லாத பெண்களின் வாழ்க்கை சீரழிந்து வருகின்றது

இந்த சீதனக் கொடுமை காரணமாக, பெண்களைக் கொண்டுள்ள குடும்பத்தினர் சீதனத்திற்காக பெரும் பொருள் ஈட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டு தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் வசதியற்ற குடும்பங்களைச்சேர்ந்த பெண்கள் திருமண உறவு மூலம் தாம்பத்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியாது பெருந்துன்பத்தையும் கஷ்டத்தையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

பெண்ணின் தனித்துவத்தையும் கௌரவத்தையும் இழிவுபடுத்தி, பெண்ணை ஒரு விலைப் பொருளாகவும், திருமண உறவை ஒரு வியாபாரமாகவும் மாற்றிவிட்ட இந்த சீதன முறையை இல்லாதொழிப்பது இன்றைய காலத்தின் தேவையாகி விட்டது.

இந்த சீதன முறையை ஒழித்துக்கட்டும் வழிமுறைகள் பற்றி எமது இயக்கம் ஆலோசித்து வருகிறது. இதுபற்றி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் இந்த சமூகப் பிரச்சினையின் சிக்கலான பரிமாணங்கள் பற்றியும், இதனை தடை செய்வது தொடர்பான சாதக, பாதக நிலைபற்றியும் பொதுமக்களிடமிருந்து ஆலோசனையையும் கருத்துக்களையும் பெற விரும்புகிறோம்.

அன்னை பூபதியின் நினைவாக நேற்று நகர் நகரி லிருந்து மக்கள் உண்ணாவிரதம் நடைபெற்ற யாழ். இந்துக் கல்லூரி மைதானம் நோக்கி ஊர்வலமாக சென்றபோது பிடிக்கப்பட்ட படம்.

## அன்னை பூபதி நினைவு இன்றைய நிகழ்வுகள்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நினைவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளன.

இன்றைய இறுதி நாள் நிகழ்வாக உண்ணாவிரத நிகழ்வுகளும், நினைவுரைகள், சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

வலிகாமம் மற்றும் தீவகக் கோட்ட அன்னை பூபதியின் 5-ம் ஆண்டின் இறுதி நாள் நிகழ்வுகள் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரையும் இறுதி நாள் உண்ணாவிரத நிகழ்வு அனுஷ்டிக்கப்படவுள்ளன.

தொடர்ந்து மாலை 7 மணிக்கு நினைவுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

நினைவுரை, சிறப்புரைகளுடன் 'தியாக சுடர்' எனும் வில்லிசை நிகழ்வுகள் 'தியாக தீபம்' நாட்டிய நாடகம் 'அன்னையிட்ட தீ' கவியரங்கு மற்றும் யாழ். பல்கலைக்கழக கலைஞர்களின் 'விடியலைத் தேடும்பறவைகள்' இசைநிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

வடமராட்சி கோட்ட மட்டத்திலான இறுதிநாள் நிகழ்வுகள் இன்று மாலிச்சந்தி பிள்ளையார் கோவிலில் நடைபெறவுள்ளன. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரையும் உண்ணாவிரத நிகழ்வும் நடைபெறவுள்ளது. இவ் உண்ணாவிரதத்தை சகலரும் அனுஷ்டிக்கும் வகையில் பெரிய அளவிலான ஒரு பந்தல் மாலிச்சந்தி விநாயகர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரத நிகழ்வைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அன்னை பூபதி நிறைவு

## பொது அறிவுத் தேர்வு இன்று பரிசளிப்பு விழா

தற்கொடையாளி அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு 1993 இல் தேசிய, கோட்ட மட்டத்தில் பரிசில் பெற்றோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

தேசியபரிசில்களைப் பெறும் மாணவர்களுக்கும் யாழ். மாவட்டத்திலுள்ள 6 கோட்டங்களிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் இன்று காலை 10 மணிகளு உரும்பராயில் அமைந்துள்ள அன்னை பூபதி கலையரங்கில் வைத்துப் பரிசில்கள் வழங்கப்பட இருக்கின்றன.

பரிசில் பெற்றோர் விபரம் 6 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

## இலங்கை அகதிகள் இருந்த முகாம் மீது தாக்குதல்

(பெர்லின்)

ஜேர்மனியில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் இல்லம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பெற்றோல் குண்டுகளால் இத் தாக்குதல் நடத்தப்பட்டபோதும், தாக்கியவர்கள் இனம் காணப்படவில்லை என்றும், இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்றும் மேலும் கூறப்படுகிறது.

## புலிகள் ஆதரவாளர் சயனைட் அருந்தி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் தேசவிரோத குழுவினரும் இணைந்து விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவரை சுடமுயன்ற போது அவர் சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்தார். இச் சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றுள்ளது.

கொக்கட்டிச்சோலை இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் கடந்த வெள்ளி காலை பண்டாரியவெளி என்ற இடத்தில் வைத்து சுடமுயன்ற போதே பூபாலசிங்கம் மனோகரன் (மாமாங்கம்) என்ற முழுநேர ஆதரவாளர் சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

செலுத்துவதற்காக தமிழீழமெங்கும் கடந்த ஒரு மாதகாலமாக எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகள், பொது இடங்கள் எங்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் அன்னைக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலானதும், எழுச்சியூட்டுவதுமான பல கோசங்களைத் தாங்கிய ளன.

மேலும் அரச, தனியார் துறை அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள், கல்விக்கூடங்கள், வர்த்தக நிலையங்கள், பொதுமக்களின் வீடுகள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்றவற்றில் அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தல்கள் வைத்தும், மக்கள் பலர் தமது அஞ்சலிகளைச் செலுத்திச்சென்றனர். இவற்றைவிட கடந்த நான்கு நாட்களாக அன்னை பூபதியின் நினைவாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் வட்டப் பிரிவு ரீதியாக அடையாள உண்ணா விரத நிகழ்வுகளும், சிரமதானப் பணிகளும் நடைபெற்றுவருகின்றன இவ

(6ஆம் பக்கம் பார்க்க)

# தியாகிபூபதியின் அறப்போர் ஒருதேசிய இனத்தின்எழுச்சி

## விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

''இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணிற் காலடி எடுத்து வைத்து, மக்களை அழித்து எமதுபோராட்டத்தை நசுக்கிக்கொண்டிருந்த வேளை, அன்னைபூபதி தனது அறப்போரை ஆரம்பித்தார். அன்னைபூபதியின் இப்போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின் கொதிப்பல்ல. ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளிப்பாடு''

இவ்வாறு தியாகி அன்னை பூபதியின் 5ஆம் ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் முன்னேற்றம் கண்டுவரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. அறுபதுகளில் எழுந்த அகிம்சைவழிப்போராட்டத்தில் பெண்கள் அலை அலையாக அணிதிரண்டனர். அதனை அடுத்து புலிகளின் தலைமையில் உருவகம்பெற்ற ஆயுதப் புரட்சிப் போராட்டத்திலும் பெண்கள் கணிசமான அளவு பங்களித்துவருகின்றனர். அனைத்து அடக்குமுறைக்கு எதிராகவும் அணிதிரண்டு போராடிக்கொண்டிருக்கும் பெண்ணினம் வியக்கத்தக்க வகையில் மகத்தான அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகின்றது.

இந்தவகையில் இந்த மண்ணுக்காகத் தம்மை அர்ப்பணித்ததியாகிகளுள் அன்னை பூபதி கால வெள்ளத்தால் அழியாத ஒரு தனிச்சரித்திரம்

இந்திய ஆக்கிரமிப்புப்படைகள் எமது மண்ணிற் காலடி எடுத்துவைத்து, மக்களை அழித்து எமது போராட்டத்தை நசுக்கிக்கொண்டிருந்த வேளை, அன்னைபூபதி தனது அறப்போரை ஆரம்பித்தார். அன்னைபூபதியின் இப்போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின்கொதிப்பல்ல ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளிப்பாடு.

[6ஆம் பக்கம் பார்க்க]

செஞ்சிலுவை அதிகாரி மரணம்

## விரிவான அறிக்கை இன்று கொழும்பில் சமர்ப்பிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் செஞ்சிலுவை அதிகாரி திரு. க. புவனேந்திரன் கொல்லப்பட்டது தொடர்பாகஇன்று விரிவான அறிக்கை ஒன்றுகொழும்பு செஞ்சிலுவை சங்கத்தில் சமர்ப்பிக்கப்படும் என நேற்றுநண்பகல்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், நோர்வே செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் உயர் பிரதிநிதிகள்கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டது.

சென்றவாரம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாற்றுப் பணிப்பாளர் திரு. தயாளதேவா இது தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் பொருட்டு யாழ். வந்து இச்சம்பவம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

புதுவருடப் போட்டிக்கு

## பலவந்தமாய் அழைத்து சுட்டுக் காயப்படுத்தினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புதுவருடதினத்தன்று அங்குள்ள இராணுவமுகாம்களில் படையினர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தினர் இதன் பொருட்டு முகாமிற்குஅருகேயுள்ள தமிழ் மக்களையும் படையினர் பலவந்தமாக முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு நடைபெற்ற கயிறு ழுத்தல் போட்டி ஒன்றில் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையில் வாய்த்தகராறு எழுந்தது. இதன் காரணமாக கடந்த வெள்ளியன்று புண்ணியமூர்த்தி என்றபொதுமகனை இராணுவத்தினர்அவரது வீட்டில்வைத்து சுட்டுக் காயப்படுத்தினர். காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூலம் தாம்பத்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியாது பெருந்துன்பத்தையும் கஷ்டத்தையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

பெண்ணின் தனித்துவத்தையும் கௌரவத்தையும் இழிவுபடுத்தி, பெண்ணை ஒரு விலைப் பொருளாகவும், திருமண உறவை ஒரு வியாபாரமாகவும் மாற்றிவிட்ட இந்த சீதன முறையை இல்லாதொழிப்பது இன்றைய காலத்தின் தேவையாகி விட்டது.

இந்த சீதன முறையை ஒழித்துக்கட்டும் வழிமுறைகள் பற்றி எமது இயக்கம் ஆலோசித்து வருகிறது. இதுபற்றி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் இந்த சமூகப் பிரச்சினையின் சிக்கலான பரிமாணங்கள் பற்றியும், இதனை தடைசெய்வது தொடர்பான சாதக, பாதக நிலைபற்றியும் பொதுமக்களிடமிருந்து ஆலோசனையையும் கருத்துக்களையும் பெற விரும்புகிறோம்.

சீதனப் பிரச்சினை சம்பந்தமாக சகலரிடமிருந்தும் கருத்துக்கள் அபிப்பிராயங்களை எதிர்பார்க்கின்றோம் இவை ஈழநாதத்தில் பகிரங்க விவாதத்திற்காக பிரசுரிக்கப்படும்.

மகளிர் அமைப்பு
தமிழீழ விடுதலைப் புலிகள்

## இனப் பிரச்சினை தீர்வுக்கு புதிய முயற்சிகளாம்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக தெரிவுக் குழுவிற்கு அப்பால் புதிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

இதற்காக சிறிலங்காப் புத்திஜீவிகள் சிலரும் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும் கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளுடன் புதிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இவர்களது முயற்சி பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முயற்சிகளுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# தோல்வியில் முடிந்த ஒப்ரேசன் "டேபிறேக்"

## மன்னாரில் 6 மணி நேர தேருதல்

(கொழும்பு)

மன்னார், வவுனியா மாவட்டங்களில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவு மற்றும் செட்டிகுளம் பகுதிகளில் நேற்று ஆறு மணிநேர இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. காலை 6 மணி முதல் நண்பகல் வரை இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மன்னார் தீவினுள் மேற்கொள்ளப்பட்ட ஒப்ரேசன் 'டே பிறேக்' எனும் இந்த இராணுவ நடவடிக்கை மன்னார் தீவினுள் நுழைந்துவிட்டதாக சந்தேகிக்கப்படும் விடுதலைப் புலிகளை கண்டு பிடிக்கவே மேற்கொள்ளப்பட்டதாக கூட்டுப்படை தலைமையகம் தெரிவித்தது.

மன்னார் தீவினுள் விடுதலைப் புலிகளின் 12 குழுவினர் ஊடுருவியுள்ளதாகவும் இவர்கள் கிளைமோர் போன்ற வெடி மருந்துகளையும் அங்கு எடுத்துச் சென்றுள்ளதாக சந்தேகிக்கப்படுவதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மயிலவெட்டுவானில் 3 பொதுமக்கள் கைது

மட்டக்களப்பு மயிலவெட்டுவான் கிராமத்தை கடந்த வெள்ளியன்று சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பல பொதுமக்களைக் கைது செய்துள்ளனர். அதிகாலை 5-30 மணியளவில் இச் சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

பின்னர் மயிலவெட்டுவானைச் சேர்ந்தவர்களான பூ. பாக்கியராஜா (வயது 23 திருமணமானவர்], தெ. செல்வராஜா [வயது 25), செ. மனோகரன் (வயது 22) ஆகியோரை முகாம்கொண்டு சென்றுள்ளனர்.

## க.பொ.த. பரீட்சை முடிவுகள் இன்னமும் கிடைக்கவில்லை

தீவுப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் இயங்கிவரும் தீவுப்பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான பாடசாலைகள் மற்றும் வடமராட்சிக் கோட்டத்தில் உள்ள இரண்டு பாடசாலைகள் என்பனவற்றின் 1992 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த. (சா.தர) பரீட்சையின் பெறுபேறுகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பெறுபேறுகள் கிடைக்காமையை இட்டு பரீட்சார்த்திகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். (நி) ((பா)

### வேட்பாளர்கள் அறிவிப்பு

பழனி மக்களவைத் தொகுதிக்கு அ.இ.அ.தி.மு.க. வேட்பாளராக குமாரசாமி என்பவர் நிறுத்தப்பட்டுள்ளார் என்று கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் திருத்தி அமைக்கப்பட்ட ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தின் பின்னர் நிருபர்களிடம் பேசிய ஜெயலலிதா மேலும் கூறுகையில் ராணிப்பேட்டை சட்ட மன்றத் தொகுதிக்கான வேட்பாளராக கோபி. எஸ். மோகனன் நிறுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

### கழக வளர்ச்சி நிகழ்ச்சி

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தினர் கழக வளர்ச்சி நிதிக்காக மாபெரும் இசை நிகழ்ச்சி ஒன்றினையும் சமூக நாடகம் ஒன்றினையும் வட்டு. விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 7 மணியளவில் கழகத்தலைவர் திரு. து. நாகேஸ்வரன் தலைமையில் நடாத்தவுள்ளனர்.

## அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



அந்நியர் ஆதிக்கத்தை அடக்கிட
அன்னையவள் புறப்பட்டாள்
உண்ணா நோன்பினை உருக்கமுடன்
மட்டுநகர் தனிலே ஆரம்பித்தாள்
வீரம் செறிந்த இவள் தயங்கவில்லை
சாவு தனை வரவேற்க.
வேண்டுகிறோம் இவள் வீரம்
ஈழம் எங்கும் பரவி நிற்க.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்

(4716)

## 31ஆவது பிறந்த தினத்தின்போது 21ஆம் மாத வீர அஞ்சலி



# லெப். கேணல் சரா

## [சின்னத்துரை ஜீவராசா (சிவம்)]

வீரத்தாயின் மழலையாக
19-04-1962

வீரமண்ணில் மாவீரனாக
27-7-1991

ஜீவராசாவே உன்குழிவிழும்
சிரிப்பாலும் பண்பான பேச்சாலும்
பணிவான நடத்தையாலும் – உன் வீரச்செயலாலும்
எம் நெஞ்சங்களில் உன் நினைவலைகள்
நிஜமாய் நிற்கிறதே! சரா–நீ
சென்று பல்லாண்டு சென்றாலும் வீடென்ன
நீ நாடிச் சென்ற இடமெங்கும் – உன்னை
காணாமல் வாடிநிற்கின்றோம்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
சித்தப்பா. அன்ரி,
தம்பிமார், தங்கைமார்.

[சி/6461)

## ஏப்ரல் 30 ஆம் திகதி அதிபர் தரம் 3 நேர்முகதேர்வு

(யாழ்ப்பாணம்)

அதிபர் தரம் 3க்கான நேர்முகப் பரீட்சை 1993 ஏப்ரல் 30 ஆம் திகதி நடைபெறும் எனவும் அதற்கு முன்னர் கொழும்புக்கு வந்து வீணாக அலைய வேண்டாமெனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

வெட்டுப்புள்ளியை 83 இல் இருந்து 79 வரை குறைக்கப்பட்டவர்களுக்கான அதிபர் தரம் 3 பதவிக்கான நேர்முகப் பரீட்சை 30-04-93-ம் திகதி நடைபெறும் எனவும் அதற்கான கடிதங்கள் தபாலில் இடப்பட்டுள்ளதாகவும், அக்கடிதங்கள் கிடைக்காவிடினும் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் கல்விச் சேவைகள் சபை உறுப்பினர் திரு. ஜெயக்குமார் தம்மிடம் தெரிவித்துள்ளதாகவும் இ.த.ஆ.ச. பொதுச்செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாவீரர் நினைவாக படிப்பகம் திறப்பு

மாவீரர் லெப்டினன்ட் செங்கண்ணன் நினைவாக யாழ். செம்மாதெரு இடம்பெயர்ந்தோர் முகாமில் படிப்பகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளி காலை 9.00 மணிக்கு மாவீரர் லெப்டினன்ட் செங்கண்ணனின் தாயாரால் திறந்து வைக்கப்பட்ட இப்படிப்பகத்திற்கான ஒழுங்குகளை புங்குடுதீவு 4-ம் வட்டார சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தினர் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (90)

## தமிழீழத்தின் தியாக தீபம் அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நினைவு



வீரப்பிறப்பு
10-01-193௮

வீரக்கொடை
19-04-1988

''அன்னையாம் பூபதியெம் அல்லல்கள் களைந்தெறிய தன்னையே ஈந்தாள், இந்தத் தரணியில் நாம் அறிவோம்

தன்னலம் தனைக் களைந்து தமிழர்தம் வாழ்வுயர உன்னத நிலையடைந்த உத்தமியை நினைவு கொள்வோம்.''

''இம்மண்ணின் விடிவிற்காய் உயிர்நீத்த மாமணிக்கு எமது சங்க சார்பில் இதய அஞ்சலிகள் உரித்தாகுக.''

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்.

(4725)

# இரண்டாம் ஆண்டு நினைவாக

உண்ணா நோன்பினை உருக்கமுடன்
மட்டுநகர் தனிலே ஆரம்பித்தாள்
வீரம் செறிந்த இவள் தயங்கவில்லை
சாவு தனை வரவேற்க.
வேண்டுகிறோம் இவள் வீரம்
ஈழம் எங்கும் பரவி நிற்க.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்

(4716)

நீ நாடிச் சென்ற இடமெங்கும் – உன்னை
காணாமல் வாடிநிற்கின்றோம்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(சி/6461)

உங்கள் பிரிவால் துயருறும்
சித்தப்பா, அன்ரி,
தம்பிமார், தங்கைமார்.

உன்னத நிலையடைந்த உத்தமியை நினைவு கொள்வோம்.''

''இம்மண்ணின் விடிவிற்காய் உயிர்நீத்த மாமணிக்கு எமது சங்க சார்பில் இதய அஞ்சலிகள் உரித்தாகுக.''

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்.

(4725)

# இரண்டாம் ஆண்டு நினைவாக



# லெப். கேணல் கிறேசி

**( கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை )**

**வீர ஜனனம் : 19-08-1962 வீரச்சாவு: 19-04-1991**

நெடிதுயர்ந்தவுன் தோற்றமும்; நெஞ்சிலே
நீ வளர்த்த விடுதலை நெருப்பதும்;
விடிவு தேடிய உன்களப் போர்களும்
வீரனே! உன் நாமம் உரைத்திடும்
வடிவு, ஆற்றல், வல்லமை கொண்டுமே
வரிப்புலிகளின் தளபதி ஆனவா!
இடிவிழுந்து நீ போனது இன்றுடன்
இரண்டு வருடமா? ஐயகோ தோழனே!

தொட்டுக்கட்டிய தாலி சுமந்தவள்
தோழராகியுன் கூட்டில் வளர்ந்தவர்
எட்டுத்திக்கும் வாழும் தமிழர்கள்
எந்நாளும் உனை மறக்கிலோம்
விட்டுச்சென்ற உன்விடுதலைப் பாதையில்
விடிவுக்காகத் தொடர்ந்துமுன் னேறுவோம்
கிட்டயிருந்தது போலவே நாளுமே
கிறேசி! எங்களின் நெஞ்சிலே வாழுவாய்

உன் நினைவுடன்வாழும்

**மனைவி, பிள்ளை, உறவினர், நண்பர்கள்**

(சி/6464)

## அறிவித்தல்

### கணக்கு மீதிகளைச் சரிபார்த்தல்

30-06-91 திகதியிலும் 30-6-92 திகதியிலும் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடனான கொடுக்கல், வாங்கல்கள்சார்பான மீதிகளை தங்கள் கணக்குகளுடன் சங்கமீதிகளைப் பார்வையிட்டு 18-04-93 — 30-04 93க் கிடையில் சீர்செய்து கொள்ளுமாறும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

30-04-93க்குப் பின் சங்கப் புத்தகங்களின் படியே மீதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி.

பொதுமுகாமையாளர்,
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(6458)

## விசேட முக்கிய அறிவித்தல்

### யாழ். குருநகர் வர்த்தகர் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

அன்புடையீர்,

எதிர்வரும் 21. 04 93 புதன்கிழமை பி. ப. 3. 30 மணியளவில் குருநகர் சந்தை வடக்கு இல. 5 காரியாலயத்தில் தலைவர் திரு. மி. யேசுதாசன் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்திற்கு குருநகர் எல்லைப் பிரதேசத்தில் உள்ள பெரிய, சிறிய வர்த்தகர் ஸ்தாபன உரிமையாளர்கள் அனைவரையும் சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை யாழ் / மாவட்ட தொழிற்சங்க உறுப்பினர்களும் குருநகர் பகுதி கடற் புலிகளின் அரசியல்துறை உறுப்பினர்களும் சமுகம் கொடுப்பார்கள்.

தலைவர் — மி. யேசுதாசன் (சி-6459) செயலாளர் — க. சி. கிருஷ்ணன்

## 5-ம் ஆண்டினில் எம் நெஞ்சங்களில்...!

சத்தியப் போரினில் நீகுதித்தாய் - எங்கள்
சந்ததி வாழ்ந்திட நீமடிந்தாய்
பாரெங்கும் உன்நாமம் வாழ்ந்திடுமே - எங்கள்
அன்னை உன்வழியை தொடர்ந்திடுவோம்.

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

வட/பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

யாழ்/ உப பணிமனை

[4719]

### சைக்கிளுடன் மூடை மாயம்

அரிசி மூடையை சைக்கிளில் கட்டி வைத்து விட்டு கடைக்குள் சென்று வேறு சாமான்கள் வாங்கி விட்டு திரும்பிய சில நிமிடங்களில் சைக்கிள் மாயமாய் மறைந்துவிட்டது.

சைக்கிளுடன் அரிசி மூடையையும் அபகரித்துச் சென்ற சம்பவம் வியாழக்கிழமைநண்பகல் யாழ் நகரில் நவீன சந்தைக்கு முன்னால் இடம்பெற்றது. (42

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11-30 மணிமுதல் பிற்பகல் 3-30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்:

விலை விபரம்:

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை சுண்டுக்குளி.

(சி/6367)

## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
முகாமையாளர்

ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(சி-6366)

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சங்கானைப் பிரிவு

## ஆடைகள்

பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்ற ஆடைகள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் சான்றிதழ் பெற்ற பெண்களால் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுமிடம்:-

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், (யாழ். கிளை)
வலி-மேற்குப் பிரிவு, மாவடி, வட்டுக்கோட்டை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கௌரவ செயலாளர்
(சி/6452)

## வரி விளம்பரம்

### காணவில்லை

'றஜனி மஹால்' உடுவில், சுன்னாகத்தை சேர்ந்த பூபாலசிங்கம் திலகவதி அவர்களின் அடையாள அட்டை (இல. 485400192V யும்) வங்கி ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்றும்ஆலங்கேணியில் கைதவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். (4724)

### செந்தமிழ்ப் பாட்டு இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றக் கலை மேம்பாட்டிற்காக யாழோசையினருடன் பல பாடகர்கள், பாடகிகள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்ச்சி யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. நுழைவாயில் ரிக்கற்றுகளை, யாழ். பூபாலசிங்கம்புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.(4640)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளிமகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

### சங்கீதம் வினா-விடை

O/L பரீட்சைக்கும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் பயன்படும் சங்கீத வினாவிடை விற்பனையாகிறது. ஆக்கம்: ''அநேகா'' ஸ்ரீசுப்பிரமணியபுத்தகசாலை, யாழ்ப்பாணம். (4700)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-19

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். வன்னி** (வேலுப்பிள்ளை வன்னியசிங்கம்- வம்மியடி ஒழுங்கை, தம்பிலுவில் 01, அம்பாறை)

1988ஆம் ஆண்டு அம்பாறை அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**அரசன்** [தங்கராசா கிருஷ்ணபிள்ளை -காரைதீவு-01, அம்பாறை]

மட்டு பாவற்கொடிச்சேனையில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைதுசெய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த-

**லூக்காஸ்** [மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை- முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, - மட்டு.]

செட்டிப்பாளையத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் கைது செய்யப்பட்டு சம்மட்டியால் அடித்துக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த

**2-ம் லெப். கலா** [பொன்னம்பலம் சதானந்தரத்தினம் - 8-ம் குறிச்சி, ஆரையம்பதி- மட்டு. ]

இந்திய ஆக்கிரமிப்புப்படைக்கு எதிராக இந்திய அரசுக்கு இரண்டு நிபந்தனைகளை முன்வைத்து மட்டு- மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தமிழீழ மக்களின் விடிவுக்காக சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு ஈகச்சாவெய்திய-

**அன்னைபூபதி** [பூபதி கணபதிப்பிள்ளை - கிரான்- மட்டு. ]

1991ஆம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஆதவன்** [பாலகிருஷ்ணன் மோகன்ராஜ் - இரணைமடுச்சந்தி - கிளிநொச்சி]

யாழ் - வீமன்காமம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

**தங்கச்சி** (முருகையா நிமலகாந்தன் - மாவைக்கலட்டி தெல்லிப்பழை - யாழ். )

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். கேணல் கிறேசி** (கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை - இல 187, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி-கிளிநொச்சி)

**லெப். வாசு** (துரைராசா துருபதராஜ் - பண்டித்துறை, நெல்லியடி, கரவெட்டி - யாழ். )

**2-ம் லெப். தென்னவன்** [வைத்திலிங்கம் விக்கினேஸ்வரலிங்கம் மயிலியதனை-- தொண்டமானாறு - யாழ். ]

**2-ம் லெப். சிக்கோ/பாதர்** (திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன்- 61/11, பிறவுண்வீதி யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
[சி/6448]

# தியாகதீபம் அன்னை பூபதி

அன்னை உன்வழியை தொடர்ந்திடுவோம்.

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

வட/பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

யாழ்/ உப பணிமனை

[4719]

பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்ற ஆடைகள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் சான்றிதழ் பெற்ற பெண்களால் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுமிடம்:–

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், (யாழ். கிளை)
வலி-மேற்குப் பிரிவு, மாவடி, வட்டுக்கோட்டை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கௌரவ செயலாளர்
(சி/6452)

மையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

சங்கீதம் வினா-விடை

O/L பரீட்சைக்கும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் பயன்படும் சங்கீத வினாவிடை விற்பனையாகிறது. ஆக்கம்: "அநேகா" ஸ்ரீசுப்பிரமணியபுத்தகசாலை, யாழ்ப்பாணம். (4700)

தொண்டமானாறு - யாழ். ]

2–ம் லெப். சிக்கோ/பாதர் (திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன்- 61/11, பிறவுண்வீதி யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6448]


# தியாகதீபம் அன்னை பூபதி

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## சொன்ன இலட்சியச் சாவை அணைத்தவள்

அன்னை துயர் துடைக்க அன்னை பூபதி
தன்னை ஈந்தாள் தரணியைக் காக்க
பின்னை இதற்குப் பெரும்பயன் உண்டென
மின்னும் ஒளியாய் மிகை ஒளி பரப்பினாள்

மட்டுநகர் வீதியில் மாகிரான் ஊரில்
கொட்டிய சுதந்திரக் கொழுந்தினில் எரிந்து
எட்டுத் திக்கும் எதிரியின் நரம்பினைச்
சுட்டுப் பொசுக்கி சாதனை படைத்தவள்

தனயர் இருவரும் தமிழீழ மண்ணிலே
இனமதன் வெறியினில் இழந்த பின்னரும்
மனதினில் உறுதியை மாசிலா நினைவினில்
கனதியாய்க் கொண்டு கலங்கரை யானவள்

அன்னையர் அணியில் ஆயிர மாயிரம்
பின்னிய அணியாய் பேசிட வைத்து
உன்னும் உண்ணா உணர்வுறு நோன்பினில்
சொன்ன இலட்சியச் சாவை அணைத்தவள்.

ஆக்கம் : வட்டூர் கவிஞர் கதிர் சரவணபவன்

(சி-6437)

**வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்**

3, செம்பியன்ஒழுங்கை, கொக்குவில்.

என் இதய கோயிலில் குடியிருக்கும்
அன்பின் அண்ணருக்கு எனது


## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



### லெப். கேணல் சரா

சின்னத்துரை ஜீவராஜா
வீரப்பிறப்பு: 19-04-1962 வீரச்சாவு: 27-07-1991
உங்களின் அன்புக்கட்டளை நிறைவேற்றும் தம்பி
கல்வியங்காடு. ம. மானா
(4723)

## அன்னை பூபதி



### 5ஆம் ஆண்டை நினைவு கூர்வோம்


''போரை நிறுத்து புலிகளோடு பேசு''
அன்னையின் அடிநாதம் அதுவாக இருந்தது
அன்னையின் அறவேள்வி 31நாட்கள் நடைபெற்றது
தமிழீழம் முழுவதும் அன்னைமுன் திரண்டது
அகிலம் கண்ணீரில் நனைந்தது - ஆனால்
பாரதம் கண்களை மூடிக் கொண்டது

## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கு ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக் கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா உணவகம்**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(சி-6439)

## ஐந்தாம் ஆண்டு நினைவாக



### தியாக தீபம் அன்னை பூபதி

உண்ணாவிரதம் 19-03-1988 ஈகைச்சாவு 19-04 1988

இமயநாடு எம்மவர்க்கு எதிரியென வாகி
ஈவிரக்க மில்லாது ஈனச்செயல் புரிய
அமைதிநாடி வந்தபடை ஆத்திரமே கொண்டு
அன்னியராய் எம்மீது ஆதிக்கங் கொள்ள
சமயமிது என்றுணர்ந்த அன்னையவள் பூபதி
சாகும்வரை தன்வயிற்றில் பசித்தீயை மூட்டி
இமையிரண்டும் மூடுவரை இருந்திடுவேன் -- இன்றேல்
எம்முடனே சமாதானம் இயற்றிடுக வென்றாள்
மூபத்து நாட்களுடன் மேலும் இரண்டு
முழுதாக தானுண்ணா நோன்பை ஏற்று
ஆபத்து எக்கணமும் நேரும் வண்ணம்
அன்னையவள் மொழிகாக்க ஆவல் கொண்டு
தாபத்துடன் இருந்தாள் இலட்சியத்தி னூடு
தன்மான நெறிகாக்க வந்தவொரு பகையை
கோபத்தோ டெதிர்த்தாள் கொள்கை வழா(து)
கொண்ட முறையாக தன்னுயிரை ஈந்தாள்.

(ஆக்கம்:வேலணையூர் பரதன்)

கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கம்,

## 30-வது பிறந்த தினம்

### திருமதி ம. ஞானசௌந்தரி

19 - 04 - 93

புலோலி தெற்கு, கம்பாவத்தையில் வசிக்கும் திருமதி ம. ஞானசௌந்தரி தனது 30-வது பிறந்த தினத்தை இன்று இல்லத்தில் கொண்டாடுகிறார். இவர் நீடூழி வாழ, அனைவரும் வாழ்த்துகின்றனர்.

(சி/6422)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01 - 01 - 1902



மறைவு 30 - 04 - 1992

### திருமதி கந்தையா மனோன்மணி

பண்பின் உறைவிடமம்மா
இல்லத்தின் தலைவியம்மா
தேசத்தின் வழிகாட்டியம்மா
பாசத்தின் சிகரமம்மா
வருடமொன்று உருண்டதம்மா
எம் இதயங்களில் என்றுமே
ஒளிவிளக்காய் வாழ்கின்றாயம்மா.

வே. ஏரம்பு
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளை,
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,
93/23 இந்து மகளிர் ஒழுங்கை, உறவினர்.
கந்தர்மடம். (சி/6457)

பதிவு
செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா உணவகம்**
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.
[சி-6438]

## கிளை ஆரம்பம்

எமது அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக் கிணங்க எமது சேவையை எம்மக்களுக்கு விரிவு படுத்தும் நோக்குடனும் அதன் முதற் கட்டமாக

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா
தனது சேவையை
கந்தர்மடம், அரசடிவீதி
அங்கர் பார்மஸியில்
விற்பனைப் பிரிவை
18-4-1993
பகல் 12-00 மணிக்கு
ஆரம்பித்துள்ளது.

எமது சுவைமிகு தரமான உணவுப் பார்சல்களை பகல் 11-30 மணிமுதல் வழங்குகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும்கந்தர்மடம், திருநெல்வேலி இந்துக் கல்லூரி மற்றும் அதைச் சார்ந்துள்ள பிரதேச மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

| | | |
|---|---|---|
| மீன் | - | 29-50 |
| இறைச்சி | - | 29-50 |
| மரக்கறி | - | 24-50 |

அத்துடன் எவ்வகையான ஓடர்களையும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா**
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை.
சுண்டுக்குளி.
(சி-6446)

## இனிப்பான செய்தி

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாகும் தரமான

### பனை வெல்லத்தை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற, கீழ்வரும் நிலையங்களை நாடுங்கள்:

மொத்த விற்பனை நிலையங்கள்
- சகல தெ. ப. பொ. சங்க தலைமையகங்கள்
- சகல தெ. ப. பொ. சங்க கொத்தணி தலைமையகங்கள்
- சங்கங்களின் சமாச சந்தைப்படுத்தும் பிரிவு
  ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

மொத்த விற்பனை விலை கிலோ 38/-

சில்லறை விற்பனை நிலையங்கள்



## 5ஆம் ஆண்டை நினைவு கூர்வோம்

''போரை நிறுத்து புலிகளோடு பேசு''
அன்னையின் அடிநாதம் அதுவாக இருந்தது
அன்னையின் அறவேள்வி 31நாட்கள் நடைபெற்றது
தமிழீழம் முழுவதும் அன்னைமுன் திரண்டது
அகிலம் கண்ணீரில் நனைந்தது - ஆனால்
பாரதம் கண்களை மூடிக் கொண்டது
மானத்து வேரான அன்னையவள் அசையவில்லை
எண்பத்துஎட்டாம் ஆண்டு ஏப்ரல் திங்கள்
பத்தொன்பதாம் நாள்
அன்னையின் ஆருயிர் விண்ணிலே புகுந்தது
அன்னையவள் தமிழீழத்தின் தன்மானச்
சுடரானாள்
பெண்களின் வீரஉணர்விற்கு மறையாத
சான்றானாள்
அன்னைபூபதி எங்கள் அருகினிலே காற்றோடு
வருவதாக உணர்வோம்.

உரமாக எழுந்து நிற்போம்
வீரப்போர் செய்து விடுதலை காண்போம்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்
சங்கம்.

(சி-6455)

## தியாக தீபத்தின் 5-ம் ஆண்டு நினைவலைகள்



இற்பிறப்பானது 10-01-1939 — தற்கொடையானது 19-04-1988

வீரத்தின் விளைநிலம் கிரானிலே வந்த
விடிவெள்ளி பூபதி அன்னையோர் தீபம்
உண்ணாத நோன்பது நோற்றாளே பாரத
முகமூடி கிழித்தங்கே நீதியை மீட்டாள்
தந்தாளே தற்கொடை மண்ணிது மீட்க
தமிழ்த்தாய் தலையது தாள்நிமிர்ந்ததுவே
வரலாற்று நாயகி பூபதி புகழே
வண்தமிழ்ப் புலவர் கருப்பொரு ளாகும்
தன்னினம் வாழத் தன்னுயிர் தந்தாள்
இந்நிலம் இருகை கூப்பிய திங்கே.

நெல்லியடி, கரவெட்டி, — வர்த்தகர் சங்கம்.

(3426)

## அன்னை பூபதி

உண்ணாவிரதம் 19-03-1988 — ஈகைச்சாவு 19-04 1988

இமயநாடு எம்மவர்க்கு எதிரியென வாகி
ஈவிரக்க மில்லாது ஈனச்செயல் புரிய
அமைதிநாடி வந்தபடை ஆத்திரமே கொண்டு
அன்னியராய் எம்மீது ஆதிக்கங் கொள்ள
சமயமிது என்றுணர்ந்த அன்னையவள் பூபதி
சாகும்வரை தன்வயிற்றில் பசித்தீயை மூட்டி
இமையிரண்டும் மூடுவரை இருந்திடுவேன் -- இன்றேல்
எம்முடனே சமாதானம் இயற்றிடுக வென்றாள்
மூபத்து நாட்களுடன் மேலும் இரண்டு
முழுதாக தானுண்ணா நோன்பை ஏற்று
ஆபத்து எக்கணமும் நேரும் வண்ணம்
அன்னையவள் மொழிகாக்க ஆவல் கொண்டு
தாபத்துடன் இருந்தாள் இலட்சியத்தி னூடு
தன்மான நெறிகாக்க வந்ததொரு பகையை
கோபத்தோ டெதிர்த்தாள் கொள்கை வழா(து)
கொண்ட முறையாக தன்னுயிரை ஈந்தாள்.

(ஆக்கம்:வேலணையூர் பரதன்)

கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கம்,
கனகபுரம் விளையாட்டுக்கழகம்,
கனகபுரம் ஸ்ரீகாந்தா சனசமூகநிலையம்,
கிளிநொச்சி.

(4720)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

வீரப் பிறப்பு 21 — 09 — 1976



வீரச் சாவு 20 — 03 — 1993

வீரவேங்கை

### தென்னவன் / சேகர்

(மகாலிங்கம் சுதர்சன்)

20-03-93இல் சுகவீனம் காரணமாக வீரச்சாவடைந்த எமது அன்புச் செல்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், அயலவர். நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சகபோராளிகள் அனைவருக்கும்நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம். 19-4-93 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும், 12 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கமல் வீதி.
மீசாலை மேற்கு,
மீசாலை.

—குடும்பத்தினர்

(சி-6444)

வே. ஏரம்பு
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளை,
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

93/23 இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

(சி/6457)

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா**
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை.
சுண்டுக்குளி.

(சி-6446)


## இனிப்பான செய்தி

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாகும் தரமான

## பனை வெல்லத்தை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற, கீழ்வரும் நிலையங்களை நாடுங்கள்:

மொத்த விற்பனை நிலையங்கள்
- சகல தெ. ப. பொ. சங்க தலைமையகங்கள்
- சகல தெ. ப. பொ. சங்க கொத்தணி தலைமையகங்கள்
- சங்கங்களின் சமாச சந்தைப்படுத்தும் பிரிவு
  ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

மொத்த விற்பனை விலை கிலோ 38/-

சில்லறை விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம்.
- பல்பொருள் விற்பனை நிலையம் நாவலர் வீதி, நாவாந்துறை—யாழ்ப்பாணம்
- பாலசிங்கம் விடுதி உணவுச்சாலை யாழ். பல்கலைக்கழகம் — யாழ்ப்பாணம்
- பல்பொருள் அங்காடி சுண்டுக்குளி — யாழ்ப்பாணம்
- சமாச சந்தைப்படுத்தல் பிரிவு ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| அரியாலை | அரிகோப் பனம் பொருள் அங்காடி<br>மாம்பழச் சந்தி — அரியாலை |
| கோப்பாய் | கூட்டுறவு அங்காடி<br>இருபாலைச்சந்தி — கோப்பாய் |
| சங்கானை | வலி கொத்தணி விற்பனை நிலையம்<br>அம்பாள் கடை — சங்கானை<br>பனம் பொருள் விற்பனை நிலையம்<br>அராலி வீதி — சங்கானை |
| மானிப்பாய் | மானிப். கோப் விற்பனை நிலையம்<br>வைத்தியசாலை முன்பாக — மானிப்பாய் |
| கோண்டாவில் | கற்பகத்தரு விற்பனை நிலையம்<br>தாவடிச்சந்தி — கோண்டாவில் |
| சுன்னாகம் | கற்பகத்தரு விற்பனை நிலையம்<br>ஸ்ரேசன் வீதி — சுன்னாகம் |
| சாவகச்சேரி | பொற்பதி விற்பனை நிலையம்<br>இல. 2, பஸ்நிலையம், சாவகச்சேரி |
| கொடிகாமம் | சேவை நிலையம்<br>கச்சாய் வீதி — கொடிகாமம் |
| பளை | பனம் பொருள் விற்பனை நிலையம்<br>பஸ் நிலையம் — பளை |
| அச்சுவேலி | கற்பகம் விற்பனை நிலையம்<br>பிரதான வீதி — அச்சுவேலி |
| நெல்லியடி | பனையகம்<br>கொடிகாம்ம வீதி — நெல்லியடி |
| பருத்தித்துறை | மொத்த விற்பனை நிலையம்<br>மந்திகை சந்தி - பருத்தித்துறை |

சில்லறை விற்பனை விலை 40/-

இவ் விற்பனை நிலையங்களின் விற்பனைக்கு வரவுள்ள புதிய உணவு

**'திராட்சைப் பாகு'**

சுவைக்க தயாராகுங்கள்

வடமராட்சி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
திக்கம் வடிசாலை. அல்வாய்.

விளம்பர அன்பளிப்பு:
அச்சுவேலி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம்
கட்டைவேலி — உடுப்பிட்டி தெ. ப. பொ. கூ. சங்கம்
பருத்தித்துறை — புலோலி தெ. ப. பொ. கூ. சங்கம்

(3427)

## சிந்தனைக்கு

செய்வாய் எனச்சொல்லிசெய்யாஉலோபரை போல்
பெய்வாய் எனக்காட்டி பேர்முகிலே - மைவானில்
ஓடுவாய்; நிற்பாய்; உருமுவாய்; மின்னுவாய்,
நீடுவாய், பின்பெய்யாய் நீ.

— வேதநாயகம்பிள்ளை.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## பேரினவாதத்தின் போர்க்குரல்

வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன் ஒருவனுக்கு மருமகள் ''பிச்சை இல்லை''என்று கூறி அனுப்பினாளாம். ஆனால், அதை ஏற்றுக்கொள்ளாத மாமியார்,பிச்சைக்காரனை திருப்பிக் கூப்பிட்டு, ''பிச்சை இல்லை என்று கூற அவளுக்கு என்ன உரிமை இருக்கின்றது. இப்பொழுது நான் கூறுகின்றேன் பிச்சை இல்லைப்போ'', என்று கூறிப் பிச்சைக்காரனைத் திருப்பி அனுப்பி வைத்தாளாம்.

மாமியார்-மருமகள் மோதலை வெளிக்காட்டுவதற்கென 'பகிடியாக' கூறப்படும் இக்கதையை தற்பொழுது, இனப்பிரச்சினைத் தீர்விற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கதைஒத்துள்ளது. ஆனால் இதில் ஒரு வேறுபாடும் உண்டு. மாமியார்-மருமகள் விவகாரத்தில், இருவரும் ஒரேமுடிவை தனித்தனியாகக் கூறினார்கள். ஆனால், தெரிவுக்குழு விடயத்தில், சிங்கள பேரினவாதக் கட்சிகள் ஒவ்வொன்றும் முன்னர் தனித்தனியாகக் கூறியதை தற்பொழுது ஒருமித்துக் கூறியுள்ளன.

சிங்களப் பேரினவாதத்தைப் பொறுத்து கிழக்கு மாகாணத்தை கபளீகரம் செய்வதும், தமிழர் தேசியத்தைச் சிதைத்து இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பது என்பதுமே அவர்களின் அடிப்படை நோக்கமாகும்.

இக்கொள்கையே பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டத்திலும் பிரதிபலித்துள்ளது. இதனை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்காவே தெளிவாகப் பிரதிபலித்துள்ளார். அவர் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் ''கிழக்கு மாகாணத்தை 'பயங்கரவாதத்தில்' இருந்து விடுவித்து அங்கு சமாதானத்தை ஏற்படுத்தி புனர்நிர்மாண, அபிவிருத்தி செய்து போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார்.

அதாவது, இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கைக்கும், திரு. மங்களமுனசிங்காவின் அறிவிப்புக்கும் இடையில், என்ன வேறுபாடு உள்ளது? பிரேமதாசா, கிழக்கு மாகாணத்தில் இருந்து விடுதலைப் புலிகளை வெளியேற்றி, முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கென இராணுவத்தை கடந்த மூன்று வருடங்களாக ஏவிவிட்டுள்ளார். இதன்மூலம், கிழக்கை வடக்கிலிருந்து

# அந்நியனின் அதர்மத்தை எதிர்த்து அறப்போர் தொடுத்த அன்னை

(நேற்றைய தொடர்ச்சி)

இந்திய இராணுவத்தின் நயவஞ்சக நடவடிக்கை காரணமாக அன்னையர் முன்னணிக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கத்தைக் கண்டு ஆவேசமடைகிறாள் அன்னை பூபதி. அன்னையரின் போராட்ட இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டுமென உறுதி பூண்ட அவர், சாகும் வரை உண்ணா விரதத்தை தான் தொடர்வதற்கு முன்வந்தார். அன்னம்மா டேவிட்டிற்கு நேர்ந்தகதி தனக்கும்நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக ஒரு கடிதத்தையும் எழுதிக் கொடுத்தார்.

''நான் எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும்வரைசாகும் வரை உண்ணா விரதம் இருக்கிறேன். நான் நினைவிழந்து போகும் நிலையிலும் என்னை எனது கணவனோ, பிள்ளைகளோ, உறவினர்களோ காப்பாற்றவோ, தூக்கிச் செல்லவோ முடியாது'' என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அன்னையர் முன்னணியினரின் ஆவேச நெருப்பை அணைத்து விட்டோம். சாகும் வரை உண்ணா விரதத்தைத் தடுத்து விட்டோம். மக்கள் எழுச்சியை மழுங்கடித்து விட்டோம் என இந்தியப்படை எக்காளமிட்டு இரண்டு நாட்கள் ஆகவில்லை. அன்னைபூபதி புயலாய் புறப்பட்டு மாமாங்க வீதியை வலம் வந்தாள். மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். இந்தியப் படைக்கு எதிரான கோசங்களை எழுப்பி அன்னையை வரவேற்றனர்.

*19-03-88 சனிக்கிழமை காலை 10.45 மணி*

அன்னை பூபதியின் அகிம்சைப் போர் ஆரம்பித்த நேரம் மாமாங்க வீதியில் அகற்றப்பட்ட இந்தியப் படையின் முகாம் மீண்டும் அவசர அவசரமாக புனரமைப்பு செய்யப்பட்டது. மேலதிக இந்தியச் சிப்பாய்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டது. பயமுறுத்தல்களும் தொடர்ந்தது.

### அலை அலையாகத்

அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து அன்னையர்களை அடக்குவதற்கு இந்திய இராணுவத்தினர் முடிவெடுத்தனர்

அன்னை பூபதியின் அகிம்சைப் போருக்கு ஆதரவு தெரிவித்துஆரையம்பதியில் இருந்து அன்னையர்களின் மாபெரும் எழுச்சிப் பேரணி பதாகைகளோடும், சுலோக அட்டைகளோடும் கோசங்களை எழுப்பிய வண்ணம் மாமாங்க ஆலயத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது ஊர்வலத்தை இடைமறித்த இந்தியப்படையினர் அன்னையர் மீது தடியடிப் பிரயோகம் செய்கின்றனர்.

இராணுவ வன்முறையால் ஊர்வலம் சிதறுண்டு கலைகிறது.

இந்தியச் சிப்பாய்களின்இவ் வன்செயல்களைக் கண்டித்து கடைகள் மூடப்பட்டன. பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. மட்டக்களப்பு எங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது இந்திய இராணுவத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் எதிர் நடவடிக்கைகள் தொடருவதையும் மக்கள் அச்சமின்றி அன்னை பூபதிக்கு ஆதரவு தெரிவிப்பதையும் கண்டு இந்திய அரசு அஞ்சியது.

திடீரென்று மாமாங்க ஆலயம் இந்தியப் படையினரினரால் சுற்றிவளைக்கப்படுகிறது. மூலைக்கு மூலை சிப்பாய்கள் நிலையெடுத்து நிற்கின்றனர். அன்னை பூபதி அமைதியாகத் தூங்குகின்றாள். அன்னையர்கள் சூழ இருந்து பஜனைகள் பாடுகின்றனர், கிறிஸ்தவ கீதங்கள்இசைக்கின்றனர், சர்வமத அனுஷ்டானங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### இந்திய படையின் மிரட்டல்கள்

ஓர் இந்தியச் சிப்பாய் உண்

''உன் துப்பாக்கி மிரட்டல்களுக்கெல்லாம் இந்தப் பூபதி அசையமாட்டாள்'' களைத்து இளைத்துப்போன பூபதி அம்மாவின் உதடுகள் மெல்லிய ஓசையில் அசைகிறது.

உலக நாட்டுப் பத்திரிகையாளர்கள் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் பந்தலை முகாமிட்டனர். அன்னையின் உண்ணாவிரதம் பற்றி உலகப் பத்திரிகையாளர்கள், வானொலிகள் மூலம் செய்திகள் பரவுகின்றன.

ஆனாலும் அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியப்படையினர் எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. மாறாக அன்னையின் உண்ணாவிரதப் போரை முறியடிக்கும் முயற்சிகளில் அவர்கள் மும்முரமாகஈடுபட்டிருந்தனர்.

வார்த்தைகள் கூறிப்பார்க்கின்றான். ஆனால், அவரோஎதற்கும் அசையவில்லை. ''நியாயம் தேடித்தான் என் மனைவி தன் உயிரைத் தியாகம் செய்ய உறுதி பூண்டிருக்கின்றாள்'' என அவர் உறுதியாகக் கூறுகின்றார்.

இந்திய அதிகாரிகளின் முயற்சிகள் எதுவுமே பயனளிக்கவில்லை.

அன்னை பூபதியின் இலட்சியப் போராட்டம் முடிவுக்கு வருகிறது. 19. 03. 1988ஆம் திகதி உண்ணா விரதம் ஆரம்பித்து 31ஆம் நாள் அன்னை பூபதியின் உயிர் பிரிகிறது. தென் தமிழீழ மக்கள் சோக வெள்ளத்தில் மிதக்கின்றனர். அலை அலையாக மக்கள் மாமாங்க ஆலயத்தை நோக்கி ஓடி வருகின்றனர் இந்தியப் படைகள் வீதிகளை இடைமறித்து மிரட்டுகின்றனர்.

## மிரட்டல்களுக்கு பணியாத திடசங்கற்பம்

### ஆதரவாளர் பிள்ளைகள் கைது

அன்னை பூபதி தனது உறுதியான உண்ணாவிரதப் போரினால் உணர்விழந்து செல்கின்றார். வைத்தியர்கள் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள். ஆபத்தான கட்டத்தை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.மட்டக்களப்பு நகரும் பரபரப்படைகிறது. இந்தியச்சிப்பாய்களின் இறுக்கமான நடவடிக்கைகளும் தொடருகின்றன.வீதிக்கு வீதி இராணுவ வண்டிகள் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போருக்கு உறுதுணையாக நின்றவர்கள் , அன்னையர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் கைதுசெய்யப்படுகின்றார்கள். அகிலஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, வண. பிதா சந்திரா பெர்னான்டோ, பூபதி அம்மாவின் பிள்ளைகள், விடு

**சி. கரிகாலன்**

மிரட்டல்களுக்கும், இடைமறிப்புக்களுக்கும் மக்கள் அஞ்சவில்லை. வீட்டு வேலிகளை உடைத்து மக்கள் வெளியேறுகின்றனர். மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளமாய் நிறைகின்றது. இந்தியச் சிப்பாய்கள் மிரள்கின்றனர். மக்களின் உணர்வலைகளை அடக்குவதற்கு இந்தியப்படையால் முடியவில்லை.

அன்னையின் புகழுடலைப் பரிசோதிக்க வேண்டும் எனக் கூறி இந்தியச் சிப்பாய்கள் அவரின் உடலை தூக்க முயல்கின்றனர். அன்னையர்கள் ஆவேசம் கொண்டு ஒன்று திரண்டு அன்னையின் புகழுடலைப் பாதுகாக்கின்றனர்.

இடையில் சிங்கள சிறிலங்காப் படையினரும் பூபதி அம்மாவின் புகழுடலைக் கைப்பற்றக் கங்கணம் கட்டி நிற்கின்றனர். இந்தியப்படையும், சிறிலங்காப்படையும் அன்னையின் இலட்சிய உடலுக்காகப் போட்டி போடுகின்றனர். இந்த இழுபறி நிலையைப் பயன்படுத்தி அன்னை

சொழுங்கைகள் வழியாகச் சென்று அன்னையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

இது இவ்வாறிருக்க கைது செய்யப்பட்டு முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்த முக்கியஸ்தர்களும் பூபதி அம்மாவின் பிள்ளைகளும் விடுவிக்கப்படுகின்றனர்.

அன்னையின் புகழுடல் அலங்காரத்தோடு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்கேற்ப இரகசிய வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றன. அலங்கார சோடனைப் பொருள்கள் ஆயத்த நிலையில் வைக்கப்படுகின்றன சட்டத்தரணி பொன் வேணுதாஸ்,பத்திரிகை ஆசிரியர் நித்தியானந்தம் ஆகியோர் ஊர்வல ஒழுங்குகளை கவனிக்கின்றனர். இரவோடு இரவாக வீதிகள் அலங்கரிக்கப்படுகின்றன.

அன்னையின் உயிர்பிரிந்து மூன்றாம் நாள். வெள்ளை நிற ஆடை அணிந்த அன்னையர்களின் அணிவகுப்பில் மக்கள் திரளுக்கு மத்தியில் அன்னைபூபதியின் புகழுடல் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தது.

வீதிகளில் காவல் நின்ற இந்தியச் சிப்பாய்கள் அன்னை பூபதியின் புகழுடலுக்கு சிரம் தாழ்த்தி வணங்கி நின்றனர். ஊர்வலம் கல்லடிப்பாலத்தைக் கடந்து செல்வதைக் கண்ட மக்கள் ஓடோடி வந்து அணியில் சேர்ந்து கொள்கின்றனர் நாவலடி கடற்கரையை நோக்கி நீண்ட மக்கள்பேரணிகளோடு அன்னையின் புகழுடல் சென்று கொண்டிருக்கிறது.

அன்னைபூபதியின் உயிரற்ற உடலைக் கூட இந்திய ஆக்கிரமிப்புப்படை நெருங்க முடியாமல் போயிற்று. தமிழ்மக்களின் எழுச்சியினையும், விடுதலை வேட்கையினையும், அடக்குமுறையால் அடக்கிவிட முடியாது என்பதனை அன்னைபூபதியின் இறுதி ஊர்வலம் எடுத்துக்காட்டியது.

ஒரு தாயின் ஒப்பற்ற தியாகமாக தமிழீழப் பெண் இனத்தின் எழுச்சி வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் முடிவுற்றது. அன்னையின் துணிவும், உறுதியும், அற்புதமான தற்கொடையும் இந்திய வல்லாதிக்கத்தைத் தலைகுனிய வைத்தது.

இக்கொள்கையே பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டத்திலும் பிரதிபலித்துள்ளது. இதனை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்காவே தெளிவாகப் பிரதிபலித்துள்ளார். அவர் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் ''கிழக்கு மாகாணத்தை 'பயங்கரவாதத்தில்' இருந்து விடுவித்து அங்கு சமாதானத்தை ஏற்படுத்தி புனர்நிர்மாண, அபிவிருத்தி செய்து போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார்.

அதாவது, இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கைக்கும், திரு. மங்களமுனசிங்காவின் அறிவிப்புக்கும் இடையில், என்ன வேறுபாடு உள்ளது? பிரேமதாசா, கிழக்கு மாகாணத்தில் இருந்து விடுதலைப் புலிகளை வெளியேற்றி, முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கென இராணுவத்தை கடந்த மூன்று வருடங்களாக ஏவிவிட்டுள்ளார். இதன்மூலம், கிழக்கை வடக்கிலிருந்து பிரித்துவிட திட்டமிட்டுச் செயற்பட்டுவருகின்றார். இதையே மங்களமுனசிங்காவும் கூறுகின்றார்.

இதேபோன்றே கிழக்கின் அபிவிருத்தி, புனர்நிர்மாணம் என்ற போர்வையில், பிரேமதாசா அரசாங்கம் கிழக்கில் குடியேற்றத்திட்டங்களை அமைத்து கிழக்கை ஆக்கிரமித்துவருகின்றது. இதன் மூலம், கிழக்கில் தமிழரைச் சிறுபான்மையினராக்கி, தமிழர்தாயகம் என்பதையே ஓர் அர்த்தப்படுத்த முடியாத ஒன்றாக ஆக்கிவிட முனைகின்றது. இதனையே நாகரிகமாக கிழக்கை புனர்நிர்மாணம், அபிவிருத்தி என்றசொற்களில் மங்களமுனசிங்கா குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்ட காலப் பகுதியிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை இக்குழுவினால், கொண்டுவர முடியாது என்பது குறித்து இப்பகுதியில் பிரஸ்தாபித்திருந்தோம். அதாவது, பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் அங்கத்தவர் தெரிவு முறையே இக்குழு இனப்பிரச்சினைக்கு புதியதொரு தீர்வையும் எட்டிவிடப்போவதில்லை என்பதை வெளிக்காட்டுவதாக இருந்தது. பிரச்சினைக்குரியவர்களுக்கு சம அந்தஸ்து வழங்காமலோ, அன்றி, பிரச்சினைக்குரியவர்களுடன் பேசாமல், தெரிவுக்குழுவால் தீர்வை ஏற்படுத்தமுடியாது. அத்தோடு, தெரிவுக்குழுவில் இருந்து தமிழ்க்குழுக்கள் வெளியேறியமையானது அதன் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற பெயருக்கே அர்த்தமின்மையை ஏற்படுத்தியும் உள்ளது

இந்நிலையில், தெரிவுக்குழு என்பது சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் குழுவாகவே தற்பொழுது உள்ளது. அரசியல் ஆதாயத்திற்காக இனப்பிரச்சினைக்குத் தீர்வுஎதையும் முன்வைக்காத அரசாங்கக்கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும், பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பெரும்பான்மையினராக இருந்து பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை விவாதிப்பதென்பது வேடிக்கையானதும், வருத்தத்திற்குரியதும் ஆகும். இனப்பிரச்சினைக்கு ஏதாவது ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்தால் எங்கே மற்றக் கட்சிகள் தமக்கு எதிராக அவற்றைப் பயன்படுத்திவிடுமோ என எண்ணும் கட்சிகளைக் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய தீர்வொன்றை வைக்கும் என இனியும் யாராவது எதிர்பார்ப்பார்களேயானால், அவர்களின் அரசியல் சூன்யத்தைக் குறித்து கவலைப்படுவதைத் தவிர வேறுவழி இல்லை.

வீதியை வலம் வந்தாள். மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். இந்தியப் படைக்கு எதிரான கோசங்களை எழுப்பி அன்னையை வரவேற்றனர்.

*19-03-88 சனிக்கிழமை காலை 10.45 மணி*

அன்னை பூபதியின் அகிம்சைப்போர் ஆரம்பித்த நேரம் மாமாங்க வீதியில் அகற்றப்பட்ட இந்தியப்படையின் முகாம் மீண்டும் அவசர அவசரமாக புனரமைப்பு செய்யப்பட்டது. மேலதிக இந்தியச் சிப்பாய்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பயமுறுத்தல்களும் தொடர்ந்தது.

### அலை அலையாகத் திரண்ட மக்கள்

இந்தியப்படைகளின் மிரட்டல்களும் அடக்குமுறை நடவடிக்கைகளும். அன்னைபூபதியின் உறுதிமிக்க போராட்ட உணர்வுக்கு உரமூட்டிக்கொண்டிருந்தன.

''இந்தியப்படையே திரும்பிப் போ'', ''அன்னை பூபதியைச் சாகடிக்காதே'', 'புலிகளுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்'', ''தமிழீழ மண்ணைச் சுடுகாடாக்காதே'' இவ்வாறு பாடசாலைகளுக்குச் சென்ற மாணவ மாணவியர்கள் கொளுத்தும் வெயிலிலும், கொடி பிடித்துக், கோசமிட்ட வண்ணம் அலை அலையாக அணிதிரண்டு அன்னையவளுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

மட்டக்களப்பு எங்கும் ஊர்வலங்களும், அடையாள உண்ணாவிரதங்களும் நடாத்தப்பட்டன. அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி வெகுசனப் போராட்டம் வியாபிக்கத் தொடங்கியது. இந்தியப்படைகளின் ஒவ்வொரு முகாம்களும் அன்னையர்களால் சூழப்பட்டு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அன்னை பூபதியின் அகிம்சைப் போர் மட்டக்களப்பு. அம்பாறை, திருக்கோணமலை எனத் தென்தமிழீழமெங்கும் பரவி மக்கள்எழுச்சிப்போராக மாறத் தொடங்கியது.

இந்தியப்படை மிரண்டது. அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போரைத் தடுப்பதற்கு வழி தெரியாது திணறியது.

கண்டு இந்திய அரசு அஞ்சியது.

திடீரென்று மாமாங்க ஆலயம் இந்தியப் படையினரினரால் சுற்றிவளைக்கப்படுகிறது. மூலைக்கு மூலை சிப்பாய்கள் நிலையெடுத்து நிற்கின்றனர். அன்னை பூபதி அமைதியாகத் தூங்குகின்றாள். அன்னையர்கள் சூழ இருந்து பஜனைகள் பாடுகின்றனர், கிறிஸ்தவ கீதங்கள்இசைக்கின்றனர், சர்வமத அனுஷ்டானங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### இந்திய படையின் மிரட்டல்கள்

ஓர் இந்தியச் சிப்பாய் உண்ணாவிரதப் பந்தலுக்கு ஓடி வருகின்றான் ''மாற்று இயக்கத் தோழர்கள் பூபதி அம்மாவைத் தூக்கிச் செல்லப்போகின்றார்கள்' என்றபயபீதியை ஏற்படுத்துகின்றான். ஆலய வீதியில் அமர்ந்திருந்துபஜனை நடாத்திக் கொண்டிருந்த மக்கள் அன்னை பூபதியின் அருகே நெருங்கிக்கொள்கின்றனர். அன்னையர் முன்னணியினர் ஆத்திரம்கொள்கின்றனர். ''எங்கே வரட்டும் பார்ப்பம், முடிந்தால் தூக்கட்டும் பார்ப்பம் எங்கள் பிணங்களின் மேல் தான் அன்னை பூபதியை அவர்களால் கைவைக்க முடியும்'' என ஆவேசத்தோடு ஆரவாரித்தனர்.

இந்தியச் சிப்பாய் கூறுகின்றான் ''அப்படி அவர்கள் வந்தால் நாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வோம். நீங்கள் அனைவரும் நிலத்தில் வீழ்ந்து படுத்துக் கொள்ள வேண்டும்.'' இப்படிக் கூறிவிட்டு அவசரமாக ஓடுகின்றான்.

அன்னையர்கள் பூபதி அம்மாவை விட்டு அசையவில்லை, வருவதை எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருந்தார்கள் இந்தியச் சிப்பாய் கூறியதைப்போல் தூரத்தே ஒரு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கிறது. அதனைத்தொடர்ந்து மாமாங்க வீதியைச் சுற்றி நிலையெடுத்து நின்ற இந்தியச் சிப்பாய்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஆகாயத்தை நோக்கித் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அன்னையர்களை அச்சுறுத்தி பூபதி அம்மாவின் உண்ணாவிரதப் போரை முறியடிப்பதற்கே இந்தியப்படை இத் தந்திரோபாய நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்பதைப் புரிந்து கொள்ள அன்னையர் முன்னணியினருக்கு வெகு நேரமெடுக்கவில்லை.

றார்கள். ஆபத்தான கட்டத்தை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.மட்டக்களப்பு நகரும் பரபரப்படைகிறது. இந்தியச்சிப்பாய்களின் இறுக்கமான நடவடிக்கைகளும் தொடருகின்றன.வீதிக்கு வீதி இராணுவ வண்டிகள் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போருக்கு உறுதுணையாக நின்றவர்கள், அன்னையர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் கைதுசெய்யப்படுகின்றார்கள். அகிலஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, வண. பிதா சந்திரா பெர்னான்டோ, பூபதி அம்மாவின் பிள்ளைகள், விடு

## சி. கரிகாலன்

**துணைப் பொறுப்பாளர், அரசியல்துறை.**

தலை செய்யப்பட்டிருந்த அன்னையர் முன்னணியினரின் ஆலோசகர் கிங்ஸ்லி இராசநாயகம் மீண்டும் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் சிறை வைக்கப்படுகின்றார்கள்.

வேட்டை நாய்கள் போல் வீதிகளெங்கும் இந்தியப்படைகள் வெறிகொண்டு அலைகின்றன. அன்னையின்கணவர்திரு. கணபதிப்பிள்ளையை ஓர் இந்திய அதிகாரி தனியே அழைத்துச் செல்கின்றான். ஆசை

உணர்வலைகளை அடக்குவதற்கு இந்தியப்படையால் முடியவில்லை.

அன்னையின் புகழுடலைப் பரிசோதிக்க வேண்டும் எனக் கூறி இந்தியச் சிப்பாய்கள் அவரின் உடலை தூக்க முயல்கின்றனர். அன்னையர்கள் ஆவேசம் கொண்டு ஒன்று திரண்டு அன்னையின் புகழுடலைப் பாதுகாக்கின்றனர்.

இடையில் சிங்கள சிறிலங்காப் படையினரும் பூபதி அம்மாவின் புகழுடலைக் கைப்பற்றக் கங்கணம் கட்டி நிற்கின்றனர். இந்தியப்படையும், சிறிலங்காப்படையும் அன்னையின் இலட்சிய உடலுக்காகப் போட்டி போடுகின்றனர். இந்த இழுபறி நிலையைப் பயன்படுத்தி அன்னையர்கள் பூபதி அம்மாவின் புகழுடலைத் தூக்கிச் சென்று மறைவிடம் ஒன்றில் ஒளித்து வைத்துக் கொள்கின்றனர்.

### தடைகளையும் மீறி இறுதி ஊர்வலம்

அன்னையின் புகழுடலை எழுச்சிகரமான ஊர்வலத்தோடு நல்லடக்கம் செய்ய வேண்டுமென மக்கள் திட்டமிடுகின்றனர். இந்தியப்படை வீதிக்கு வீதி காவல் நிற்கின்றது. அன்னையர்கள் மலர் மாலைகளை மறைத்துக் கொண்டு இந்தியப்படைகளின் கண்களில் படாதவாறு குச்

களோடு அன்னையின் புகழுடல் சென்று கொண்டிருக்கிறது.

அன்னைபூபதியின் உயிரற்ற உடலைக் கூட இந்திய ஆக்கிரமிப்புப்படை நெருங்க முடியாமல் போயிற்று. தமிழ்மக்களின் எழுச்சியினையும், விடுதலை வேட்கையினையும், அடக்குமுறையால் அடக்கிவிட முடியாது என்பதனை அன்னைபூபதியின் இறுதி ஊர்வலம் எடுத்துக்காட்டியது.

ஒரு தாயின் ஒப்பற்ற தியாகமாக தமிழீழப் பெண் இனத்தின் எழுச்சி வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் முடிவுற்றது. அன்னையின் துணிவும், உறுதியும், அற்புதமான தற்கொடையும் இந்திய வல்லாதிக்கத்தைத் தலைகுனிய வைத்தது.

[முற்றும்]

## சூரிய நெருப்பவள்

தெற்கே எழுந்த சூரிய நெருப்பவள்
வடக்கே காரிருள் விரட்டிய தமிழவள்
உண்ணா நோன்பால் உறுதியை தந்தவள்
உலகம் வியக்க உயர்ந்த தாயவள்

வேலியாய் விலங்குகள் காவல் இருந்தன
விடுதலைப் பயிர்களை கடித்துக் குதறின
வீதிக்கு வீதி சாவுகள் நிகழ்ந்தன
வீசிடும் காற்றும் தூய்மையை இழந்தது

ஆயிரம் மொழிகள் ஊரினில் கேட்டது
அருமைத் தமிழ்மொழி பேச்சினை இழந்தது
குளித்திடக் கூட பெண்கள் பயந்தனர்
குழந்தைகள் கூட சிரிப்பை மறந்தனர்

எங்கும் காரிருள் சூழ்ந்து கிடந்தது
ஏங்கிய மக்கள் முகங்களைத் தேடினர்
தாயவள் பூபதி தவித்துப் போனாள்
தனியே நின்று போரினைத் தொடுத்தாள்

பாரத நாட்டின் வேடம் கலைந்தது
பாரத மாதா மானம் இழந்தாள்
பாரெங்கும் எம்போர் நியாயம் தெரிந்தது
அம்மா பூபதி அமைதியாய் தூங்கினாள்.

—யோகரெத்தினம் யோகி

### வள்ளுவர் மன்றம் நடத்தும் போட்டிகள்

தமிழீழ திருவள்ளுவர் மன்றம் நடத்தும் திருக்குறள் மனனம், பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் நாளை வரும் செவ்வாய் நாளை மறுதினம் புதன் கிழமையில் உரும்பராய் இந்துக்கல்லூரியில்நடைபெறவுள்ளது. வட தமிழீழப் பகுதியின் முன்னணிப் பாடசாலைகள் பலவும் பங்குபற்றும், இப் போட்டிகளில், செவ்வாயன்றுமனனம் மற்றும் பேச்சுப் போட்டிகளும், புதனன்று கட்டுரைப் போட்டியும் இடம் பெறவுள்ளன.

### மினிபஸ்சேவை ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

யாழ்-செம்பியன் பற்று, தாளையடி பாதையில் மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஒரு வழிக்கட்டணமாக ரூபா80 அறவிடப்படுகின்றது.

### லங்கா சீமெந்து நிறுவனக் கொடுப்பனவு

லங்கா சீமெந்து நிறுவனத்தின் கொடுப்பனவுகள், கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் இருந்து பணமாக வழங்கப்பட்டது.

இதுவரை தமது கொடுப்பனவுகளைப் பெறாதோர். எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணி முதல் நான்கு மணிவரை வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் பெறத் தவறுபவர்களுக்கு பின்னர் காசோலை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

ஈழநாதம்

# ராணிப்பேட்டை, பழநி தேர்தல்களில் காங்கிரஸ் தனித்து போட்டியிடும்

[சென்னை]

பழநி மக்களவைத் தொகுதியிலும் ராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியிலும் காங்கிரஸ் கட்சி தனித்தே போட்டியிடும் என்று காங்கிரஸ் கட்சியின் மாநிலத்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் ஜி. கே. மூப்பனாரும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர்கள் இதனைத்தெரிவித்தனர். இக்கூட்டத்தில் பேசிய வாழப்பாடி காவிரி நதி நீர்ப்பிரச்சினை போன்ற விடயங்களில் முதல்வர் இரட்டைப் போக்குகளைப் கடைப்பிடிப்பதாகவும் அரசின் திட்டங்கள் அனைத்தும் முதலமைச்சரின் பெயரிலேயே தொடங்கப்படுவது நல்ல முன்னுதாரணமல்ல எனவும் தெரிவித்தார். ஜி. கே. மூப்பனார் இங்கு பேசுகையில் தமிழக மக்கள் முதல்வர் ஜெயலலிதா மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு அவர் துரோகம் செய்துவிட்டதாகவும், காங்கிரஸ்- அ.இ.அ.தி.மு.க. கட்சிகளுக்கிடையே எந்தவித உறவும் கிடையாது என்று காங்கிரஸ் மேலிடம் அறிவித்துவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

## அன்னை பூபதி

தொடர்ந்து மாலை 7 மணிக்கு நினைவுப் பேருரைகளும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இன்றைய இறுதி நிகழ்வாக 'பூபதியின் புனிதப் போர்' எனும் நாட்டிய நாடகமும் ''தியாகத்தாய்'' வில்லிசை நிகழ்வும் இடம்பெறுகின்றன. தென்மராட்சி கோட்ட அன்னை பூபதியின் 5-ம் ஆண்டின் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன மேற்படி கோட்ட நிகழ்வுகள் கொடிகாமம், நாவலடி அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறுகின்றன இறுதிக் கலை நிகழ்வுகளாக ''தியாகத்தாய்'' நாட்டிய நாடகமும் ''தியாக தீபம்'' எனும் வில்லிசை நிகழ்வும் இடம்பெறுகின்றன.

மேற்படி அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நிகழ்வுகளில் அனைத்து தமிழீழ மக்களை

## புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுக் கூட்டம்

(கொழும்பு)

புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழு கூட்டம் ஒன்று நாளை செவ்வாய் கொழும்பு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சில் நடைபெறவுள்ளது அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண அரச அதிபர்கள் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது

## விரிவான

குறித்து பூர்வாங்க விசாரணை ஒன்றையும், நேரில் கண்ட சாட்சிகள், சம்பவம் நடைபெற்ற இடம் ஆகியவற்றை விசாரித்து பார்வையிட்டமை தெரிந்ததே.

இவரது அறிக்கை நேற்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகள் மத்தியில் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்தும் நோக்குடனும், அதன் மூலம் ஒரு விசாரணை மேற்கொள்ள அரசை நிர்ப்பந்திப்பதற்கு இவ்வட்டாரங்கள் முயல்வதாக தெரியவருகிறது.

## பட்டதாரிப்

ளத்தில் காலை 9-00மணிக்கு நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும். யாழ். கல்வித்திணைக்களத்தில் முன்கூட்டியே தமது பெயர்களைப் பதிவுசெய்த பட்டதாரிகள் தத்தம் பிறப்புச்சான்றிதழ், பட்ட தாரிச் சான்றிதழ், பரீட்சைக்கு விண்ணப்பித்தும் தோற்றமுடியாமற் போனவர்கள் தாங்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்ததை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடனும் (ஒவ்வொரு சான்றிதழினதும் நிழற்பிரதிகளுடன்) குறிப்பிட்ட திகதிகளில் தவறாது சமுகமளிக்குமாறும், ஏலவே இந்திய மனம் பெற்று வெளிமாவட்

## தியாகி

மிகவும் இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் எமது தாயக பூமியின் மூலை முடுக்கெல்லாம் அந்நிய இராணுவத்தின் ஆதிக்கச் சுவடுகள் பதிந்திருந்தவேளையில், சாதாரண மக்கள் எவரும் துணிந்து போராடத் தயங்கிய நேரத்தில் அன்னை பூபதி தனது அறப்போராட்டத்தினை நடாத்தினார்.

தனது 58-வது வயதில் அவர் மேற்கொண்ட இந்தத் தியாகப் போராட்டம், அவரது மன உறுதியையும் தேசப் பற்றையுமே காட்டி நிற்கின்றது போராட்டத்தைக் குழப்புவதற்கு இந்திய ஆக்கிரமிப்புப்படை எத்தனையோ மிரட்டல்கள், அச்சுறுத்தல்களை மேற்கொண்டபோதும் அவற்றிற்கெல்லாம்பணியாது அவர் தனது போராட்டத்தினைத் தொடர்ந்தார். அவரது தியாகப்போராட்டம் பெண்ணினத்திற்கெல்லாம் முன்னுதாரணமாக அமைந்தது.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்காரணமாகத் தமிழீழப் பெண்கள் எத்தனையோ அடக்குமுறை ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு தவித்தவேளையில், அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தினால் பெண்ணினத்தை எழுச்சி பெறச் செய்தார்.

ஒரு சாதாரண குடும்பப் பெண், வயோதிபத்தாய் மேற்கொண்ட இப்போராட்டம் அனைத்துப் பெண்களும் எத்

## அன்னை பூபதி நினைவு

# பொது அறிவுத் தேர்வு பரிசு பெறுவோர் விபரம்

மேற்படி தேர்வில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசில்களைப் பெறுவோர் விபரம்:

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன.

**ஆண்டு - 7**

1. சஞ்சிகா கந்தையா — செஞ்சோலை மகளிர் பா.
2. அ கடிதாஸ் — புதுமறிப்பு விக்கினேஸ்வர வித்
3. தங்கராசா பிரபாகரன் — தொல்புரம் விக்னேஸ்வர வித்.

**ஆண்டு - 8**

1. வி. கேஸ்கண்ணா — பன்றிக்கெய்தகுளம் அ.த.க.பா.
2. சிவநேசன் பிரபாகரன் — யூனியன் கல்லூரி
3. நவரத்தினம் கோமதி — கம்பர்மலை அ. த. க. பா.

**ஆண்டு - 9**

1. தெ. சதீசன் — மன்னார் காக்கையன்குளம் ம.வி.
2. மகேந்திரன் ரமணன் — இமையாணன் அ த. க. பா.
3. பத்மகீதா பத்மநாதன் — வேம்படி மகளிர் கல்லூரி

**ஆண்டு - 10**

1. கெங்காதரன் இந்திரமோகன் — யூனியன் கல்லூரி
2. யோகநாதன் சிவராம் — யூனியன் கல்லூரி
3. வெற்றிவேல் நாகநாதன் — கொக்குவில் இந்துக்கல்லூரி

**ஆண்டு - 11**

1. வே. நர்மலா — கம்பர்மலை அ. த. க. பா.
2. து சந்திரமோகன் — புதுக்குடியிருப்பு ம. வி.
3. தர்மலிங்கம் ஜெயமாலா — அத்தியார் இந்துக் கல்லூரி

**ஆண்டு - 12, 13**

1. நவரத்தினம் கண்ணன் — உடுப்பிட்டி அமெரிக்கமிசன் பா
2. சி அமலநேசன் — விடத்தல்தீவு றோ.க. த. க. பா
3 சொக்கலிங்கம் தனஞ்செயன் — யாழ்ரன் கல்லூரி காரைநகர்

கோட்டமட்டப் பரிசில் பெறுவோரது விபரம்:- கோட்ட ரீதியாக வருமாறு. இவர்களுக்கு சிறப்புப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன.

**ஆண்டு - 7**

வடமராட்சிக் கோட்டம்:-

1. ச. மேரி றெசில்டா — செம்பியன்பற்றுறோ.க.
2. ஆனந்தராசா றிச்மன் — வதிரி இருதயக்கல்லூரி

மருதனார் மடக்கோட்டம்:-

1. தேவிகா ஐயாத்துரை — செஞ்சோலைமகளிர் பா.
2. மணியம் மயூரன் — வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்
2. கல்பனா நேசராசா — செஞ்சோலைமகளிர் பா.

தென்மராட்சிக் கோட்டம்:-

1. வி. கோகுலன் — சாவகச்சேரி மகளிர் கல்லூரி
2. வெற்றிவேல் அருள்மோகன் — நாவற்குழி ம. வி.
3. துரைசிங்கம் ஜனகன் — சாவகச்சேரி றிபேக் கல்லூரி
3. இராசையா சிவயோகேஸ்வரி — கிளி/தர்மக்கேணி

**ஆண்டு - 8**

யாழ். கோட்டம்:-

1. கணேசமூர்த்தி அனந்தன் — யாழ். இந்துக் கல்லூரி
1. சு. சதானந்தன் — கோண்டாவில்இந்தும வி.
3. அருளையா இளங்குமரன் — யாழ். இந்துக் கல்லூரி
3. புவனேந்திரன் தர்மேந்திரா — கொக்குவில் இந்துக் கல்லூரி
3. கி.மெரீன் — சென் யேம்ஸ் மகளிர் வித்தியாலயம்

வடமராட்சிக் கோட்டம்:-

1. திருநாவுக்கரசு கோகிலவதனா — கப்புது ஏகாம்பர வித்தி.

பண்டதரிப்புக் கோட்டம்:-

1. நடேசன் உதயசேகர் — மகாஜனக் கல்லூரி
2. மகேந்திரராஜா பிரவீணன் — மகாஜனக் கல்லூரி
3. சிவபாதரத்தினம் சிவரூபன் — மகாஜனக் கல்லூரி

மருதனார்மடக் கோட்டம்:-

1. புவனேந்திரநாதன் ரதீசன் — பத்தமேனி இரத்தினேஸ்வரி
1. பிரபாகரன் வாசுகி — ,, ,,
3. கந்தசாமி முரளிதரன் — ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்

# பாகிஸ்தான் அரசாங்கம் நேற்றுக் கலைக்கப்பட்டது

பாகிஸ்தான் அரசாங்கம் கலைக்கப்பட்டு காபந்து அரசு அமைக்கப்பட்டது.

நவாப் ஷெரீப் அரசு அரசியல் சட்டத்துக்கு அமையச் செயற்படாததால் அந்த அரசைத்தான் கலைப்பதாக ஜனாதிபதி குலாம் இஸாக்கான் நேற்று மாலை அறிவித்தார். நவாப் ஷெரீப் அரசுக்குப் பதிலாக காபந்து அரசையும் ஜனாதிபதி நியமித்தார்.

கடந்த ஐந்து வருடங்களில் பாகிஸ்தானில் ஜனாதிபதியால் கலைக்கப்பட்ட மூன்றாவது அரசு நவாவ் ஷெரீவ் அரசு என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மகப்பேற்றுக்காக லண்டன் சென்றிருந்த முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ இரு தினங்களுக்கு முன்னரே நாடு திரும்பியது குறிப்பிடத்தக்கது.

# தகுதி அடிப்படையில் அதிகாரிகளை நியமிக்குக

## இ. த. ஆ. சங்கம் மகஜர்

(மட்டக்களப்பு)

சேவையில் இருந்து கொண்டே பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டம் பெற்ற திகதியிலிருந்து பட்டதாரிகள் சம்பளம் வழங்கப்பட வேண்டும். தொண்டர் ஆசிரியர்களில் தவறவிடப்பட்ட ஏ. பி. பட்டியலில் உள்ள ஆசிரியர்களையும், சி, டி பட்டியலில் உள்ள சகல ஆசிரியர்களையும், ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று மட்டக்களப்பில் இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்தினால், கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரனிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இரண்டு வருடங்களுக்கு மேலாக வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆறு மாதக் கடனைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

26-6-90க்கும் அதற்கு முன்னைய திகதியிலிருந்தும் பதில் அதிபர்களாகவும் பதில் விரிவுரையாளர்களாகவும், பதில் உதவிப் பணிப்பாளர்களாகவும்கடமையாற்றுவோரைஅப் பதவியில் நிரந்தரமாக நியமனம் செய்யவேண்டும். வலய, பிரதேச, கல்வி அலுவலகங்களிலுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கும் நியமனம் செய்யும் போது, விளம்பரப்படுத்தப்பட்டு. விண்ணப்பங்கள் கோரப்பட்டுத் தகுதி அடிப்படையில் நியமனம் செய்யப்படல் வேண்டும்.

வடக்குக் கிழக்கிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை விசேடமாக ஆரம்ப பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்குப் புதிய ஆசிரியர்களை நியமனம் செய்வதன் மூலமும், ஒப்பந்த அடிப்படையில் இளைப்பாறிய ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமும்நிவர்த்தி செய்ய வேண்டும்.

கோட்டம், மாவட்டம். மாகாணம் மத்திய அமைச்சு மட்டங்களில் இடமாற்றச் சபைகள் நிறுவப்பட்டு திடமான இடமாற்றத் திட்டம் வகுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இடமாற்றங்கள் நடைபெற வேண்டும்.

மேற்படி விடயங்கள் அடங்கிய மகஜரை இ. த. ஆ. சங்கத் தலைவர் வி. த. குமாரசாமி, பொதுச் செயலாளர் த. மகாசிவம், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கா. சின்னத்துரை மற்றும் சங்கத் தலைவர்கள் கல்வி ராஜாங்க அமைச்சரிடம் சமர்ப்பித்து விளக்கினர். அறிக்கையைப் பெற்றுக் கொண்ட ராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

## யாழ். மாவட்டத்திற்கான

# இலவசப் பாடப் புத்தகங்கள் முழுவதும் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான இலவசப் பாட நூல்கள் முற்றாக யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவில்லை என அதிபர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

தேவையான இலவசப் பாட நூல்களில் மூன்றில் இரண்டு

யான இலவசப் பாட நூல்கள் அனைத்தும் கையளிக்கப்பட்டு விட்டதாக கல்வி அமைச்சின் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

இதேவேளை, மற்றுமொரு முக்கிய கற்பித்தல் உபகரணமான வெண்கட்டியும் பல மாதங்களாக யாழ்ப்பாணத்துக்குத் தரப்படவில்லை என்

கலை நிகழ்வுகளும் நடைபெற வுள்ளன. இன்றைய இறுதி நிகழ்வாக 'பூபதியின் புனிதப் போர்' எனும் நாட்டிய நாடகமும் ''தியாகத்தாய்'' வில்லிசை நிகழ்வும் இடம்பெறுகின்றன. தென்மராட்சி கோட்ட அன்னை பூபதியின் 5-ம் ஆண்டின் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன மேற்படி கோட்ட நிகழ்வுகள் கொடிகாமம், நாவலடி அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறுகின்றன இறுதிக் கலை நிகழ்வுகளாக ''தியாகத்தாய்'' நாட்டிய நாடகமும் ''தியாக தீபம்'' எனும் வில்லிசை நிகழ்வும் இடம்பெறுகின்றன.

மேற்படி அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நிகழ்வுகளில் அனைத்து தமிழீழ மக்களையும் பங்கேற்றுகொள்ளுமாறு நினைவு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


## விநாயகர் கல்வி நிலையம்

1993 O/L DAY CLASS

புதிய பிரிவு

ஏப்ரல் 20 இல் ஆரம்பமாக உள்ளது. அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளது முன்கூட்டியே அனுமதிகளைப் பதிவு செய்யவும்.

ஆண்டு 6—11 வரை.

மாலை வகுப்புக்களும் நடைபெறுகிறது.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

(சி-6462)


... வருகிறது.

### பட்டதாரிப்

ளத்தில் காலை 9-00மணிக்கு நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும். யாழ். கல்வித்திணைக்களத்தில் முன்கூட்டியே தமது பெயர்களைப் பதிவு செய்த பட்டதாரிகள் தத்தம் பிறப்புச்சான்றிதழ், பட்ட தாரிச் சான்றிதழ், பரீட்சைக்கு விண்ணப்பித்தும் தோற்றமுடியாமற் போனவர்கள் தாங்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்ததை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடனும் (ஒவ்வொரு சான்றிதழினதும் நிழற்பிரதிகளுடன்) குறிப்பிட்ட திகதிகளில் தவறாது சமுகமளிக்குமாறும், ஏலவே இந்திய மனம் பெற்று வெளிமாவட்டங்களுக்கு அமர்த்தப்பட்டவர்கள் இந் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்கவேண்டியதில்லை என்றும் யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### இன்று

ற்றில் அந்தந்தப்பகுதி மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பற்றிவருவதாக அவ்வப்பகுதிகளில் இருந்துஎமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் பல்வேறு பகுதிகளில் நினைவஞ்சலிக்கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இதேவேளைகுடாநாட்டுக்கு வெளியிலும் குறிப்பாக வன்னிப்பிராந்தியத்திலும் தியாகி அன்னை பூபதிக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

... புப்படை எத்தனையோ மிரட்டல்கள். அச்சுறுத்தல்களை மேற்கொண்டபோதும் அவற்றிற்கெல்லாம்பணியாது அவர் தனது போராட்டத்தினைத் தொடர்ந்தார். அவரது தியாகப்போராட்டம் பெண்ணினத்திற்கெல்லாம் முன்னுதாரணமாக அமைந்தது.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்காரணமாகத் தமிழீழப் பெண்கள் எத்தனையோ அடக்குமுறை ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு தவித்தவேளையில், அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தினால் பெண்ணினத்தை எழுச்சி பெறச் செய்தார்.

ஒரு சாதாரண குடும்பப் பெண், வயோதிபத்தாய் மேற்கொண்ட இப்போராட்டம் அனைத்துப் பெண்களும் எத்தகைய வாழ்க்கைச் சூழ்நிலையிலும் துணிந்து போராடலாமென்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

குடும்ப உறவுகள், சுயநலப் பற்றுக்கள் என்பவற்றைத் துறந்து, எமது இனம், எமது தேசம், எமது மக்கள் என்ற பரந்த அடிப்படையிலான நோக்கத்திற்காக அவர்நடாத்திய இந்தத் தியாகப்போராட்டம் அதியுன்னதமானது. 32 நாட்கள் நீராகாரம் எதுவுமின்றித் தன்னையே உருக்கித் தாயகத்திற்கு ஈந்த இந்தத் தற்கொடை - இதுவரை உலக வரலாற்றில் நிகழாத ஒரு போராட்டச் சம்பவமாகும். விடுதலை இலட்சியத்துக்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துஉயிர்த்தியாகஞ்செய்த உலகத்தின் முதற்பெண்மணி என்ற பெருமையை அன்னை பூபதி எமது போராட்டத்திற்குத் தேடித்தந்தார்.

போராட்டத்தின் எழுச்சிக் குரலாக, பெண் குலத்தின் சக்திவடிவமாக அன்னைபூபதி 19-04-1988 அன்று தனது 58-வது வயதில் எமது தேசத்தின் அணையாததீபமானாள்.

அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தில் தன்னைத் தற்கொடையாக்கி 5 வருடங்கள் மறைந்துவிட்டபோதும், அவரது தியாகம் என்றென்றும் எமது மக்களின் மனங்களில் அணையாத சுதந்திரச் சுடராக நிலைத்துவிட்டது.

எனவே இத்தகைய தற்கொடையாளி அன்னைபூபதியை நினைவுகூரும் இப்புனித நாளில் எமது விடுதலைப் போராட்டத்தில் தமக்குள்ள தேசியக்கடமையை உணர்ந்து அனைத்துத் தமிழீழப் பெண்களும் அணிதிரண்டு போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க உறுதிபூணவேண்டும்.

... கல்லூரி
3. இராசையா சிவயோகேஸ்வரி — கிளி/தர்மக்கேணி

### ஆண்டு - 8

யாழ். கோட்டம்:-
1. கணேசமூர்த்தி அனந்தன் — யாழ். இந்துக் கல்லூரி
1. சு. சதானந்தன் — கோண்டாவில்இந்தும வி.
3. அருளையா இளங்குமரன் — யாழ். இந்துக் கல்லூரி
3. புவனேந்திரன் தர்மேந்திரா — கொக்குவில் இந்துக் கல்லூரி
3. கி.மெரீன் — சென் யேம்ஸ் மகளிர் வித்தியாலயம்

வடமராட்சிக் கோட்டம்:-
1. திருநாவுக்கரசு கோகிலவதனா — கப்புது ஏகாம்பர வித்தி.

பண்டதரிப்புக் கோட்டம்:-
1. நடேசன் உதயசேகர் — மகாஜனக் கல்லூரி
2. மகேந்திரராஜா பிரவீனன் — மகாஜனக் கல்லூரி
3. சிவபாதரத்தினம் சிவரூபன் — மகாஜனக் கல்லூரி

மருதனார்மடக் கோட்டம்:-
1. புவனேந்திரநாதன் ரதீசன் — பத்தமேனி இரத்தினேஸ்வரி
1. பிரபாகரன் வாசுகி — ,, ,,
3. கந்தசாமி முரளிதரன் — ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்
3. தங்கவேலாயுதம் சரத்பாபு — ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்

தென்மராட்சிக் கோட்டம்:-
1. சி. கருணாகரன் — குடமியன் அ. த. க.

வேலணைக்கோட்டம்:-
1. ப. பிரதாயினி — கரம்பொன் சண்முகநாதவித்தியாலயம்
2. இ.பத்மசிறி — ,, ,,

### ஆண்டு - 9

யாழ். கோட்டம்:-
1. வாசுகி சங்கரப்பிள்ளை — வேம்படி மகளிர்
2. நந்தகுமாரி காசிவிஸ்வநாதர் — ,, ,,

வடமராட்சிக் கோட்டம்:-
தங்கராசா பிரதீபன் — ஹாட்லிக் கல்லூரி

மருதனார்மடம் கோட்டம்:-
.1 மயில்வாகனம் வதனகீர்த்தனா — ஆவரங்கால் நடராசா இராமலிங்கம்

### ஆண்டு - 10

யாழ். கோட்டம்:-
1. சங்கரப்பிள்ளை சிவசங்கர் — யாழ். இந்துக் கல்லூரி
1. யோகராசா சிவாகரன் — ,, ,,
1. நடராசா ஜெயகரன் — ,, ,,

வடமராட்சிக்கோட்டம்:-
1. நடராசா நரேஸ் — ஹாட்லிக் கல்லூரி
1. விஜயசிங்கம் கோகுலசிங்கம் — ,, ,,
3. தம்பிஐயா காண்டீபன் — ,, ,,

பண்டத்தரிப்புக் கோட்டம்:-
1. கிருஷ்ணன் கிருபன் — யூனியன் கல்லூரி
1, க. மதன மௌலி — புனித கென்றியரசர் கல்லூரி

மருதனார்மடம் கோட்டம்:
1 சாந்தலிங்கம் செந்தில்குமார் — ஸ்கந்தவரோதாயாக் கல்லூரி.
2. தாமோதரம்பிள்ளை சந்திரவதனா — நவாலி ம. வி.

வேலணைக் கோட்டம்:
1. கனகசுந்தரம் சிவக்குமார் — புங்குடுதீவு கணேச ம. வி.

### ஆண்டு - 11

யாழ். கோட்டம்:
1. சி. பவகுகன் — பரியோவான் கல்லூரி
2. கு. பிரதீபன் — ,, ,,
3. சகிலா கிருசாந்தி — கொன்சாக்திருக்குடும்பம் கன்னியர்மடம்

வடமராட்சிக் கோட்டம்:
1. மேனகா தங்கேஸ்வரன் — உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
2. ஒப்பிலாமணி திவாகரன் — ஹாட்லிக் கல்லூரி
2. தங்கேஸ்வரன் மாறன் — ,, ,,
2. விஜயரட்ணராஜா ஜெயகாஸ் — ,, ,,

பண்டத்தரிப்புக் கோட்டம்:
1. சர்மிலா சண்முகலிங்கம் — யூனியன் கல்லூரி
2. சஞ்சயன் சச்சிதானந்தன் — ,, ,,
3. ஏரம்பு விஜயரத்தினம் — மூளாய் சைவப்பிரகாச வித்தி.

மருதனார்மடக் கோட்டம்:
1. உஷாந்தி துரைரட்ணம் — உடுவில் மகளிர் கல்லூரி
1. பாலசுப்பிரமணியம் ரமேஸ்கண்ணா — இணுவில் ம. கல்லூரி

தென்மராட்சிக் கோட்டம்:
1. த. தேனுகா — சாவகச்சேரி மகளிர் கல்லூரி
2. தெ. யாழினி — ,, றிபேக் ,,
3. கந்தசாமி நிகரில்காந்த் — வரணி ம. வி.

வேலணைக் கோட்டம்:
1. பெலிசியா அல்பேட் — புனித மரியாள் பெண்கள் பாடசாலை ஊர்காவற்றுறை

### ஆண்டு 12, 13.

யாழ். கோட்டம்:
1. புவனேந்திரன் செந்தில்ரூபன் — யாழ். இந்துக் கல்லூரி
2. ம. தமியான் யூலி தயான் — கனகரத்தினம் மத். மகா, வித்.

வடமராட்சிக் கோட்டம்:
1. இரத்தினசிங்கம் சுபாகரன் — உடுத்துறை ம. வி,
2. முத்துலிங்கம் சுதர்சன் — ,, ,,
3. சிவப்பிரகாசம் விஜயாலயன் — ஹாட்லிக் கல்லூரி

தென்மராட்சிக் கோட்டம்:
1. நவரத்தினராசா மஞ்சுதன் — சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2. பிரேமினி சபாரத்தினம் — ,, ,, ,,
3. ஜனார்த்தனி இராசையா — வரணி ம. வி.

தென்மராட்சிக் கோட்ட மட்டத்தில் 7ஆம் ஆண்டில் முதலாவது இடத்தைப் பெறும் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி நாலாம் ஆண்டு மாணவரான செல்வன் வி. கோகுலன் அவர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் சிறப்புப் பரிசும் வழங்கப்படவுள்ளது.

... வும்கடமையாற்றுவோரைஅப் பதவியில் நிரந்தரமாக நியமனம் செய்யவேண்டும். வலய, பிரதேச, கல்வி அலுவலகங்களிலுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் அமைச்சரிடம் சமர்ப்பித்து விளக்கினர். அறிக்கையைப் பெற்றுக் கொண்ட ராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திற்கான

## இலவசப் பாடப் புத்தகங்கள் முழுவதும் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான இலவசப் பாட நூல்கள் முற்றாக யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவில்லை என அதிபர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

தேவையான இலவசப் பாட நூல்களில் மூன்றில் இரண்டு பங்கு பாட நூல்கள் மட்டும் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டன. இப் பாடநூல்களை யாழ்ப்பாணம் கொண்டுவரும் சாத்தியம் இனிமேல் இல்லை என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாழ். குடா நாட்டுப் பாடசாலைகளுக்குத் தேவையான இலவசப் பாட நூல்கள் அனைத்தும் கையளிக்கப்பட்டு விட்டதாக கல்வி அமைச்சின் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

இதேவேளை, மற்றுமொரு முக்கிய கற்பித்தல் உபகரணமான வெண்கட்டியும் பல மாதங்களாக யாழ்ப்பாணத்துக்குத் தரப்படவில்லை என்றும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### தோல்வியில்

இதேசமயம் வவுனியா செட்டிகுளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை இப்பகுதியில் படையினர் தமது நிலையை பலப்படுத்திக்கொள்ளும் முகமாகவே இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இராணுவ நடவடிக்கைகளுக்காக படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள இவ்விரு பகுதிகளிலும் 6 மணி நேர ஊரடங்கை படையினர் அமுல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மருந்து தட்டுப்பாடு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் முக்கியமான பல வகை மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மலேரியா, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களுக்கான மருந்து வகைகளுக்கும், அம்பிசிலின் மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்குமே பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

இவ் வைத்திய சாலைக்கு வருகின்ற நோயாளிகள் வைத்திய சாலையில் மருந்துகள் இல்லாததால் வெளியிலேயே கூடுதலான மருந்துகளை பெற்றுக்கொள்ள நேரிடுகிறது.

## மரண அறிவித்தல்

### செல்வி வெண்ணிலா கைலைநாதன்

செல்வி வெண்ணிலா கைலைநாதன் (யூனியன் கல்லூரி உயர்தரம் கணிதம் 94) கொழும்பில் காலமானார். அன்னார் அளவெட்டி கொட்டடி நாகநாதர் கைலைநாதன் - சொர்ணமாலா (அம்பிகா) ஆகியோரின் ஏக புத்திரியும், சரவணனின் (யூனியன் கல்லூரி உயர்தரம் கணிதம் 93) அன்புத் தங்கையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-04-93 ஞாயிறு காலை 10 மணியளவில் கொழும்பில் நடைபெற்றது.

தற்போதைய முகவரி:
பிள்ளையார் கோயிலடி,
சங்குவேலி வடக்கு.

தகவல்:
சிவபாலசிங்கம்
தாத்தா

[4727]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.